விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 29 வியாழக்கிழமை (12.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 84

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான முதலாவது இலங்கைக் குடிமகன் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளார்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான இலங்கைக் குடிமகன் ஒருவர் அடையாளம் காணபட்டுள்ளார்.

தேசிய தொற்றுநோயியல் சிகிச்சை வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பெற்று வருவதை அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் நேற்று உறுதி செய்துள்ளார்.

காய்ச்சல் மற்றும் இருமலால் அவதிப்பட்ட ஒருவர் இரண்டு தினங்களுக்கு முன்னர் ஐடிஎச் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியானது.

சுற்றுலாத்துறை வழிகாட்டியாக பணியாற்றும் 50 வயதான ஒருவரே தொற்றுக்குள்ளாகியுள் ளார் அவர் பற்றிய மேலதிக அடையாளங்கள் வெளியிடப்படவில்லை.

இத்தாலியை சேர்ந்த சுற்றுலா 23

## கொரோனா வைரஸ் தொற்று இலங்கையில் பரவினால் கட்டுப்படுத்துவது சவாலாகும்

### சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்றானது இலங்கையில் பரவினால் கட்டுப்படுத்துவது சவாலாகும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான முதலாவது இலங்கைப் பிரஜை கண்டறியப்பட்டிருப்பதைத் தொடர்ந்து, இதன் பாரதூரத் தன்மையைப் புரிந்து கொண்டு கொரோனா வைரஸ் தொற்று நாட்டில் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி வலியுறுத்தினார்.

சீனா, அமெரிக்கா, இத்தாலி போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளே கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப் படுத்துவதற் 23

## கோழி இறைச்சியின் விலை குறைப்பு

(கொழும்பு)

கோழி இறைச்சியின் விலை நேற்று புதன்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் தோலுடன் கூடிய கோழி 475 ரூபாயில் இருந்து 430 ரூபாயாகவும் தோல் நீக்கப்பட்ட கோழி 600 ரூபாயில் இருந்து 530 ரூபாயாகவும் விலை குறைக்க 23

## இலங்கைக்கான விசாவை இடை நிறுத்த அரசு முடிவு

(கொழும்பு)

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு வழங்கப்படும் வருகையின் போதான நுழைவு விசையை (Visa On Arrival) மறு அறிவித்தல் வரை இடைநிறுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

உலகம் முழுவதும் அச்சுறுத்தலாகக் காணப்படும் கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றை இலங்கை யில் கட்டுப் பாட்டில் வைத்திருக்கும் 23

## பிரித்தானிய சுகாதார அமைச்சர் நாடின் டோரிஸுக்கு கொரோனா வைரஸ்



(லண்டன்)

பிரித்தானிய சுகாதார அமைச்சர் நாடின் டோரிஸ் கொரோனா வைரஸ் 23

## யாழ்.பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் சித்திரவதை

மனித உரிமை ஆணைக்குழுவால் மீட்கப்பட்டு யாழ்.போதனாவின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பு

23ம் பக்கம் பார்க்க

- இலங்கை வரும் வெளிநாட்டவர் -

## சுகாதார திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குக

### மறுத்தால் நாட்டிலிருந்து வெளியேற்றப்படுவர் இராணுவ பேச்சாளர் எச்சரிக்கை விடுப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸினால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து இலங்கை வருவோர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் முன்னெடுக்கப்படும் சுகாதார திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தனா விக்கிரமசிங்க விடுத்துள்ளார்.

அவ்வாறு ஒத்துழைப்பு வழங்க மறுப்போர் எந்த நாட்டிலிருந்து வந்தார்களோ அந்த நாட்டுக்கே மீண்டும் அனுப்பி வைக்கப்படுவார்கள் என அவர் எச்சரித்துள்ளார்.

இத்தாலி, தென் கொரியாவில் இருந்து இலங்கை வருவோரை தனிமைப்படுத்தி பரிசோதனை செய்யும் நடவடிக்கை நேற்று முன்தினம் 23

ஐவர் கொண்ட குழு

## ஆசிரியர் மீது தாக்குதல்

(குப்பிழான்)

யாழ்.அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்திற்குள் நுழைந்த இனந்தெரி 23

## 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட சீனர்கள் கண்காணிப்பில்

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

சீனாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த 4000 க்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் இல்லை என்பதை உறுதிப்படுத்த அவர்கள் உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றார்கள் என சுகாதார 23

## இந்துக்களை கிறிஸ்தவர்களாக மாற்றுவதனை நிறுத்துக

### இந்து சமய அதியுயர் குருபீடங்கள் ஜனாதிபதி, பிரதமருக்கு கடிதம்

(கொழும்பு)

இந்துக்களை கிறிஸ்தவர்களாக மாற்றுவதும் இந்துத் தெய்வங்களின் 23

## கொரோனா ஒரு தீவிரமான தொற்று நோய்

### உலக சுகாதார அமைப்பு

(ஜெனிவா)

கொரோனா வைரஸ் ஒரு தீவிர தொற்றுநோய் என்று உலக சுகாதார அமைப்பு 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பில் முன்னேற்றம் தேவை

## ஆப்கானிஸ்தான் தூதுவரிடம் மாநகர முதல்வர் எடுத்துரைப்பு



(யாழ்ப்பாணம்)

காணமலாக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் முன்னேற்றம் தேவை என ஆப் கானிஸ்தான் தூதுவரிடம் யாழ் மாநகர முதல்வர் எடுத்துரைத்துள்ளார்.

யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட்க்கும் இலங்கைக்கான ஆப்கானி ஸ்தான் தூதுவர் எச். ஈ. மொஹமட் அஸ்ரப் ஹைதரி ( H.E.MOHAMMED ASHRAF HAIDARI) ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பு ஒன்று நேற்று புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் யாழ் மாநகர முதல்வர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பில் தூதுவர் முதலில் தனது அனுபவங்களை முதல்வருடன் பகிர்ந்து கொண்டார். அவர் தனது அனுபவப்பகிர்வில் தங்களுடைய நாட்டு மக்கள் எதிர் கொண்ட 40 வருட பிரச்சினைகள், அதன் பின்னர் படிப்படியாக ஏற்பட்ட முன்னேற்றங்கள், தமது நாட்டு மக்களின் தற்போதைய முன்னேற்றம், தான் பணியாற்றிய பல்வேறு நாடுகளில் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் உள்ளிட்ட விடயங்களை விரிவாக சுட்டிக்காட்டியிருந்தார். அதனைத் தொடர்ந்து மக்களின் நிலைமைகள், அவர்களின் எதிர்பார்ப்புக்கள், அரசினால் முன்னெடுக்கப்பட்டுள்ள முன்னேற்றகரமான செயற்பாடுகள் தொடர்பில் தூதுவர் வினவினார். அதற்கு பதிலளித்த முதல்வர், மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் பல இன்னும் தீர்க்கப்படாதுள்ளமையினை சுட்டிக்காட்டினார். காணாமலாக்கப் பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு தொடர்பில் மேற்கொள்ளப் படவேண்டிய முன்னேற்றம குறித்தும் விளக்கினார். அதாவது கடந்த அரசாங்கத்தின் காலத்தில் வடக்கில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக் கப் பட்டமையினையும், பல காணிகள் விடுவிக்கப்பட்டமையையும் சுட்டிக்காட்டிய முதல்வர் இவற்றில் இன்னும் முன்னேற்றங்கள் தேவை என்பதையும் சுட்டிக் காட்டினார்.

மேலும் இலங்கையில் நீண் டகாலமாக தமிழ் மக்களால் முன் வைக்கப்பட்டுவரும் அர சியல் தீர்வு விடயங்களில் கடந்த அரசின் காலத்தில் முன்னெடுக் கப்பட்ட புதிய அரசியல் யாப்பு உருவாக்க நடவடிக்கைகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்ட பங்களிப்புக்கள் தொடர்பிலும், கடந்த தேர்தல் மூலம் ஏற்பட்ட மாற்றம், புதிய ஆட்சி மாற்றத்தினால் புதிய யாப்பை உருவாக்கும் பணிகள் இடை நடுவில் கைவிடப்பட்டமை தொடர்பிலும், இப்படியான சந்தர்ப்பத்தில் தற்பொழுது எதிர்நோக்க இருக்கின்ற பொதுத் தேர்தல், இதில் தமிழ் மக்களின் நிலைப்பாடுகள், தொடர்பிலும் விரிவான விளக்கமொன்றை முதல்வர் முன்வைத்தார். தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் பலப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும், அதன் பின்னர் அரசியல் தீர்வு விடயத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் கருத்து வெளியிட்டிருந்தார். தொடர்ந்து முதல்வர் குறிப்பிடும் போது, தமிழத் தேசியக் கூட்ட மைப்பே தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்து வருகின்றது என்பதையும், அரசு எம்முடனே பேச வேண்டும் எனவும், இதுவரை எம்து தலைவர்களுடன் அரசு பேச முன்வரவில்லை என்றும், பொதுத் தேர்தலுக்காகவே அவ்வாறு பேசாமல் இருக்கக் கூடும் எனவும், அதன் பின்னர் பேசுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும், மக்கள் தமிழத் தேசியக் கூட்டமைப்பிற்கே தொடர்ச்சியான தமது ஆணையை வழங்கி வருகின்றார்கள் என்றும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் நிச்சயமாக இத் தீர்மானத்திலேயேதான் இருக்கின்றார்கள் என்றும், எதிர்காலத்தில் இவ் ஆதரவு இன்னும் அதிகரிக்கும் என்றும், தமிழ் மக்களின் ஒற்றுமையையும், பாராளுமன்றில் உள்ள பலத்தை சிதைக்க புதிதாக உருவாக்கப் பட்டுள்ள தமிழ் உதிரிக்கட்சிகளின் போக்குகள் குறித்து மக்கள் மிகுந்த தெளிவுடனே இருக்கின்றார்கள் என்பதையும் உறுதிபட முதல்வர் தெரிவித்தார்.

இதன் போது தூதுவரும் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் முயற்சிகள் குறித்து தானும் அறிந்திருப்பதாகவும், மேலும் தொடர்ச்சியாக அரசியல் யாப்பு உருவாக்க பணிகளை முன்னெடுப்பதற்கான முயற்சிகளை தேர்தலின் பின்னரும் முன்னெடுக்குமாறு கூறியிருந்தார்.

இறுதியாக கடந்த அரசின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள், யாழ் நகர் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து தூதுவருக்கு முதல்வர் விரிவான விளக்கம் ஒன்றை முன்வைத்தார். மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும், மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் தூதுவர் கேட்டறிந்து கொண்டார். (ம-3)

# சீனாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை தனிமைப்படுத்தாதது ஏன்?

## -ஜே.வி.பி கேள்வி

(கொழும்பு)

இத்தாலி, தென்கொரியா மற்றும் ஈரானிலிருந்து வருபவர்கள் தனிமைப்படுத்தப் படுகின்ற போதும் சீனாவிலிருந்து வரும் சுற்றுலா பயணிகள் ஏன் தனிமைப்படுத் தப்படுவதில்லை என ஜே.வி.பி. கேள்வி எழுப்பியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில், ஜேவிபியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கருத்து வெளியிடுகையில்,

"சீன பிரஜைகள் சுதந்திரமாக இருப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் பாங்கொக் மற்றும் ஹொங் கொங் ஊடாக வந்த விமானம் மூலம் சுமார் 60 சீன பிரஜைகள் வருகை தந்துள்ளனர். எனினும், அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை. சுகாதார அமைச்சினால் விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், இத்தாலி, தென்கொரியா மற்றும் ஈரான் முதலான நாடுகளிலிருந்து வரும் பயணிகளை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த வைரஸ் தொற்று உருவாகிய சீனாவிலிருந்து வருபவர்கள் குறித்து குறிப்பிடப்படவில்லை. அவர்கள் சுதந்திரமாக உள்ளனர்" என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# தேர்தலை பிற்போட அரசாங்கம் முயற்சி

## -ஹரின் பெர்னான்டோ

அதிகரித்திருக்கும் பொருளாதார பிரச்சினையினால் நாட்டுமக்கள் மத்தியில் தோன்றியிருக்கும் அதிருப்தியை கருத்தில் கொண்டும் சஜித் பிரேமதாச தலைமையில் அமைக் கப்பட்டுள்ள பலம் பொருந்திய எதிர்த்தரப்பு கூட்டணிக்கு அஞ்சியும் பொதுத்தேர்தலை பிற்போடுவதற்கான நடவடிக்கைகள் இடம் பெறுவதனை அறிய கூடியதாக இருப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர் ணான் டோ தெரிவித்தார்.

தேர் தலை காலம் கடத்திவிட்டு இராணுவரீதியான ஆட்சிமுறைமையை முன்னெடுத்து விட்டு பின்னராக தேர் தலை நடத்துவதற்கான முயற்சிகளும் இடம்பெறுவதாக அரசாங்க உயர் மட்ட தகவல்களின் ஊடாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார தலைமையக அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார். (ம-3)

பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9249)

ரெங்கசாமி கண்டி, அம்பத்தன்ன - 077 112 3471
Viber - 076 466 4153
வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. தங்கவடிவேல் செந்தூரன்
(MSc (comp.sc), BIT, Dip in Teach, SLPS - III)
அவர்கள் 2019 அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 04.03.2020 அன்று யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரியின் உதவி அதிபராக தனது கடமையைப் பொறுப்பேற்றதையிட்டு எமது பாடசாலைச் சமூகம் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை
(2583)

கடை, கட்டடத்தொகுதி விற்பனைக்கு

மந்திகை சிலையடி சாவகச்சேரி வீதியில் செம்பாடு என்று அழைக்கப்படும் காணியில் நில பரப்பு 01 ,குளி 12.40 விற்பனைக்குண்டு. இக் காணியில் ஆறு (06) கடைக்கட்டடங்கள் உள்ளன. (C-9470)

தொடர்பு:-0770563983

கார், வான் குத்தகைக்கு தேவை

தனியார் நிறுவனத்திற்கு கார்கள், வான்கள் சாரதி அல்லாமல் மாதாந்த, வருட குத்தகைக்கு தேவை. (2584)

0772676453

## வேட்பு மனுவில் கையொப்பமிட்டார் பிரதமர்



மகிந்தவுக்காக மன்றாடிய மைத்திரி

(விஜேராம)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கையொப்பமிட்டார்.

விஜேராம பகுதியிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து அவர் நேற்றுப் புதன்கிழமை குறித்த மனுவில் கையொப்பமிட்டார்.

இந் நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பொதுத்தேர்தல் 2020 ஏப்ரல் 25ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொரோனா சிகிச்சைக்கு எதிர்ப்பு! மட்டு.சட்டத்தரணிகள் போராட்டம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையை கொரோனா சிகிச்சைப் பிரிவாக மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு மாவட்டச் சட்டத்தரணிகள் சங்கத்தினர் நேற்று பணிப் பகிஷ்கரிப்பையும் கவனயீர்ப்புப் போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

நீதிமன்ற நடவடிக்கைகளை பகிஷ்கரித்த சட்டத்தரணிகள், நீதிமன்றுக்கு முன்பாக, கொரோனா வைரஸ் மட்டக்களப்புக்கு வேண்டாம் கொரோனாவுக்கு கிழக்கு தான் இலக்கா? மட்டக்களப்பை சுடுகாடாக்காதே போன்ற சுலோகங்கள் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்கும் செயற்பாடு மட்டக்களப்பு மாவட்டத்தை முற்று முழுதாகப் பாதிப்புக்குள்ளாக்குமென மட்டக்களப்பு மாவட்டச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி பே.பிரேம்நாத் இதன்போது தெரிவித்தார். (ஜ-2)

### பெரமுனவுக்கு மாத்திரமே விருப்பு

# கழுகுகளுக்கு வாக்குகளை வழங்கினால் 2015 ஆம் ஆண்டு நடந்ததே நடக்கும்!

## சு.கவை நேரடியாகத் தாக்கிய சமல் ராஜபக்ஷ

(அம்பாந்தோட்டை)

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்களுக்கு மாத்திரம் விருப்பு வாக்குகளை வழங்குமாறும் கழுகுகளுக்கு (சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களுக்கு) விருப்பு வாக்குகளை வழங்கினால், 2015 ஆம் ஆண்டு நடந்ததே நடக்கும் எனவும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.**



அம்பாந்தோட்டை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நிறுத்தப்படும் வேட்பாளர் பட்டியலை அவர் அறிவித்தார்.

முதல் வேட்புமனு நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்படும். டி.வீ. சானக, அஜித் ராஜபக்ஷ, கபில திஸாநாயக்க, லயனல் சுதசிங்க, உபுல் கலப்பத்தி ஆகியோர் ஏனைய வேட்பாளர்கள்.

கழுகுகளுக்கும் வேட்புமனு வழங்கப்பட வேண்டும். இதனடிப்படையில், மகிந்த அமரவீரவுக்கு வேட்புமனு வழங்கப்படும். இம்முறை பொதுத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொதுஜன பெரமுன 5 ஆசனங்களை கைப்பற்றும். விருப்பு வாக்குகளை வழங்கும் போது பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்களுக்கு மாத்திரம் விருப்பு வாக்குகளை வழங்க வேண்டும் எனவும் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியினருக்கு விருப்பு வாக்குகளை வழங்க வேண்டாம் என பகிரங்கமாக கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் இந்த பேச்சானது, பொதுஜன பெரமுனவின் சிறிய தலைவர்கள் மட்டுமல்ல, ராஜபக்ஷவினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை தோற்கடிக்க திட்டமிட்டுள்ளதை காட்டுவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.(இ-7)



### கொரோனா அச்சம் அதிகரிப்பு

## வெளிநாட்டிலிருந்து வருகைதந்த மற்றுமொரு குழு முகாம்களுக்கு!

### மக்கள், மாணவர்கள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

தென் கொரியா, ஈரான் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்த மற்றுமொரு குழுவினர் கொரோனா தடுப்பு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு, குறித்த நாடுகளில் இருந்து வருகை தந்த சுமார் 300 இலங்கையர்கள் நேற்றுப் புதன்கிழமை காலை மட்டக்களப்பு மற்றும் கண்டக்காடு கொரோனா தடுப்பு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை தென்கொரியா மற்றும் இத்தாலியில் இருந்து நேற்று முன்தினம் காலை வருகை தந்த 181 பேர் கொண்ட முதலாவது குழுவினர், கொரோனா வைரஸ் தடுப்பு முகாமான மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களுள் 179 இலங்கையர்கள் மற்றும் 2 தென்கொரிய நாட்டவர்கள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.


இந்நிலையில் குறித்த செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து மட்டக்களப்பு மக்களினால் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை கொரோனா வைரஸ் தாக்கமுள்ள நாடுகளிலிருந்து வருபவர்கள் மட்டக்களப்பிலுள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் தங்கவைக்கப்பட்டு வருகின்றமையால், நேற்று அப்பகுதியிலுள்ள பெருமளவான மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை. இதனால் அதிகளவான பாடசாலைகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இதனிடையே கொரோனா வைரஸ் தொற்றை இலங்கையில் பரவாமல் தடுப்பதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அரசாங்கம் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கே.எல்.ராகுலின் துடுப்பாட்ட ஸ்டைல் எனக்கு மிகவும் பிடிக்கும்-பிரையன் லாரா






இந்திய பேட்ஸ்மேன் கேஎல் ராகுலின் பேட்டிங் ஸ்டைல் எனக்கு மிகவும் பிடிக்கும் என வெஸ்ட் இண்டீஸ் ஜாம்பவான் பிரையன் லாரா தெரிவித்துள்ளார்.

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியில் தொடக்க பேட்ஸ்மேனாக அறிமுகம் ஆனவர் கேஎல் ராகுல். டெஸ்ட் மற்றும் டி20 கிரிக்கெட்டில் சிறப்பாக விளையாடினார். ஆனால் இங்கிலாந்து தொடருக்குப்பின் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் டெஸ்ட் அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனால் அவரது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விட்டதாக கருதப்பட்டது. ஆனால் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக விளையாடியதன் மூலம் டி20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இடம்பிடித்துள்ளார். இரண்டிலும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

விக்கெட் கீப்பர் பணியையும் சேர்ந்து கவனிப்பதால் அவரை மிடில் ஆர்டர் வரிசையில் களம் இறக்கி விளையாட அணி நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

விரைவில் டெஸ்ட் போட்டிக்கான அணியிலும் இடம் பிடிப்பார் என்று கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் கேஎல் ராகுலின் பேட்டிங் ஸ்டைல் எனக்கு மிகவும் பிடிக்கும் என வெஸ்ட் இண்டீஸ் முன்னாள் ஜாம்பவான் பிரையன் லாரா தெரிவித்துள்ளார்.

கேஎல் ராகுல் குறித்து பிரையன் லாரா கூறுகையில் "நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் ஏன் சேர்க்கப்படவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவருடைய ஆட்ட நுணுக்கம், அவர் பேட்டிங் செய்வதை நான் பார்த்த வகையில் எந்த அணிக்கு எதிராகவும் அவருக்கு பிரச்சினை இருப்பதாக தெரியவில்லை.

அனைத்து வடிவிலான கிரிக்கெட்டிலும் விளையாடுவதற்கான திறனை பெற்றுள்ளார். அவரது இடத்தை தற்காத்துக் கொள்ளும் திறனையும் பெற்றுள்ளார். இந்திய கிரிக்கெட் அணியில் விராட் கோலிக்குப் பிறகு முதல் நபராக அவரது பெயரை என்னால் தெரிவிக்க முடியும். எனக்கு பிடித்த பேட்ஸ்மேன் கேஎல் ராகுல்" என்றார்.

# பி.வி.சிந்து வெற்றி

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் ஆல் இங்கிலாந்து பேட்மிண்டனில் பிவி சிந்து முதல் சுற்றில் சீன வீரா ங்கனையை வீழ்த்தினார்.

ஆல் இங் கிலா ந்து பேட் மிண்டன் சாம் பியன் ஷிப் ஸ் இங் கிலாந் தில் நடைபெற்று வருகி றது. பெண்க ளுக் கான ஒற் றையர் பிரிவு தொடக்க சுற் றில் இந்திய வீரா ங்கனை பிவி சிந்து சீனாவைச் சேர்ந்த பெய்வென் ஷாங்க எதிர்கொண்டார்.

இதில் பிவி சிந்து 21-14, 21-17 என நேர்செட் கணக்கில் வெற்றி பெற்று 2-வது சுற்றுக்கு முன் னேறினார். கடந்த சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற போட்டியில் பெய் வெ ன்னிடம் பிவி சிந்து தோற்றிருந்தார் என் பது குறிப்பிடத்தக் கது.

# சென்ஜோன்ஸ்-யாழ் மத்தி ஒருநாள் போட்டி சனிக்கிழமை

யாழ் சென்ஜோ ன்ஸ் கல்லூ ரிக்கும் யாழ் மத்திய கல் லூரிக்கும் இடையி லான ஒருநாள் போட்டி நாளை மறு தினம் சனிக் கிழமை சென்ஜோ ன்ஸ் கல்லூரி மைதானத்தில் இட ம்பெறவுள்ளது

50 ஓவர்கள் கொண்ட போட்டி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்

பார்வையாளர் கள் பொது மக்கள் அனைவரும் பூங் கா வீதியில் உள்ள நுழைவாயிலை பய ன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுளளது .(ம)

# கொரோனா பீதி இருந்தாலும் இந்திய ஓபன் பட்மின்டன் நடைபெறும்

YONEX-SUNRISE INDIA OPEN

கொரோனா வைரஸ் பீதி காரணமாக இந்திய ஓபன் பேட்மிண்டன் தொடரை பார்வையாளர்கள் இல்லாமல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்திய ஓபன் பேட்மிண்டன் வருகிற 24-ந்தேதி முதல் மார்ச் 29-ந்தேதி வரை நடைபெறும் வகையில் ஏற்கனவே போட்டி அட்டவணை தயார் செய்யப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருவதால் விளையாட்டு போட்டிகளை நடத்துவது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. ஐபிஎல் போன்ற ஆட்டங்களை ஒத்திவைக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியா ஓபன் பேட்மிண்டன் தொடர் நடைபெறும் என இந்திய பேட்மிண்டன் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் "திட்டமிட்டபடி மார்ச் 24-ந்தேதியில் இருந்து 29-ந்தேதி வரை நடைபெறும்

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தும் து??தமான வகையில் மேற்கொள்ளப்படும். போட்டியை ரசிகர்கள் யாருமின்றி பூட்டிய மைதானத்திற்குள் (Closed Doors) நடத்தும் வாய்ப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் அடங் கும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா பீதி: ஐ.பி.எல். போட்டிக்கு தடைவிதிக்க கோரி வழக்கு





இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிப்பு அடைந்தவர்களின் எண்ணிக்கை 60-ஐ தாண்டியுள்ளது நிலையில் ஐபிஎல் போட்டிக்கு தடைகோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சீனாவில் முதன்முதலாக கண்ட றியப்பட்ட கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் வேகமாக பரவி வருகிறது. இந்தியாவிலும் இந்த வைரஸ் பலரை தாக்கியுள்ளது.

தமிழகத்தில் காஞ்சிபுரத்தை சேர்ந்த ஒருவருக்கு இந்த வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டது. கேரளாவிலும் பலருக்கு இந்த வைரஸ் பாதிப்பு உள்ளது. உலகத்தையே இந்த கொரோனா வைரஸ் அச்சுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி வருகிற 29-ந்தேதி முதல் மே 24-ந்தேதி வரை நடைபெற உள்ளது. இந்த போட்டியை இந்திய கிரிக்கெட் வாரியம் நடத்துகிறது.

இந்த போட்டிக்கு தடைவிதிக்க கோரி சென்னை ஐகோர்ட்டில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:-

உலகம் முழுவதும் 1 லட்சத்து 22 ஆயிரத்து 42 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு உள்ளது. இதில் 3 ஆயிரத்து 497 பேர் பலியாகியுள்ளனர். உலகம் முழுவதும் வேகமாக பரவி, மனித இனத்துக்கு மிகப்பெரிய சவாலாக திகழும் இந்த வைரஸ் நோய்க்கு மருந்து இல்லை.

மிகப்பெரிய அளவில் அழிவை ஏற்படுத்துவதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. ஐ.எப்.எல். என்ற கால்பந்து விளையாட்டு போட்டி தற்போது கொரோனா வைரஸ் பாதிப்பால் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.


இந்திய கிரிக்கெட் வாரியம் கடந்த 2008-ம் ஆண்டு முதல் ஐ.பி.எல். 20 ஓவர் போட்டியை நடத்தி வருகிறது. நடப்பாண்டில் நடைபெற உள்ள இந்த கிரிக்கெட் போட்டியை சுமார் 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையிலான ரசிகர்கள் ஒரே நேரத்தில் ஒரே மைதானத்தில் பார்வையிடுவார்கள்.

இதனால், கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்கள் இந்த கூட்டத்தில் இருந்தால், இந்த வைரஸ் வேகமாக பிறருக்கு பரவ தொடங்கிவிடும். இதனால், மிகப்பெரிய ஆபத்து ஏற்படும்.

எனவே, இந்திய கிரிக்கெட் வாரியம் வருகிற 29-ந்தேதி முதல் மே 24-ந்தேதி வரை நடத்த உள்ள ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கு தடைவிதிக்க வேண்டும். இந்த போட்டியை நடத்த அனுமதிக்க கூடாது என்று மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அதில் கூறப் பட்டுள் ளது.

இந்த வழக்கு நீதிபதிகள் எம்.எம். சுந்தரேஷ், கிருஷ்ணன் ராமசாமி ஆகியோர் முன்பு இன்று விசாரணைக்கு வர உள்ளது.

# உமிழ்நீரை பயன்படுத்தாது பந்தை ஷைனிங் செய்வது எப்படி? - புவனேஷ்வர் குமார்




கொரோனா பீதியால் பந்தை ஷைனிங் செய்வது எப்படி என்பதுதான் கேள்விக் குறியாக உள்ளது என புவனேஷ்வர் குமார் தெரிவித்துள்ளார்.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக தென்ஆப்பிரிக்கா அணி இந்தியா வந்துள்ளது. முதல் போட்டி இன்று தரம்சாலாவில் நடக்கிறது.

இரண்டு அணி வீரர்களும் போட்டிக்கு தயாராகி வருகிறார்கள். கொரோனா வைரஸ் பீதியால் இரு அணி வீரர்களும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை டாக்டர்கள் ஆலோசனைப்படி கடைபிடிக்க இருக்கிறார்கள்.

போட்டியின்போது புதுப்பந்தை பளபளப்பாக வீரர்கள் உமிழ்நீரை பயன்படுத்துவார்கள். உமிழ்நீரை தொட்டு பந்தை நன்றாக தேய்ப்பார்கள். இதனால் பந்து ஷைனிங் ஆகி ஸ்விங் ஆகும்.

இப்படி வீரர்கள் செய்தால் நோய் பரவ வாய்ப்புள்ளது. டாக்டர் ஆலோசனைக்கு பிறகு இதுகுறித்து முடிவு எடுக்கப்படும் என இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து புவனேஷ்வர் குமார் கூறுகையில் "நாங்கள் இந்த விஷயம் குறித்து சிந்தித்துள்ளோம். ஆனால், உமிழ்நீரை பயன்படுத்தமாட்டோம் என்பதை தற்போது என்னால் கூற இயலாது. ஏனென்றால், உமிழ்நீரை பயன்படுத்தாவிடில், பந்தை ஷைனிங் செய்வது எப்படி?.

அப்புறம் எங்களது பந்தை துவம்சம் செய்தால், நாங்கள் சரியாக பந்து வீசவில்லை என்று ரசிகர்கள் கூறுவார்கள். நேற்று மாலை அணியின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. அப்போது இது குறித்து முடிவு செய்யப்பட்டும். மேலும் என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது குறித்து ஆலோசனை வழங்கப்படும்" என்றார்.

# லொறி- மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

## இளைஞன் பலி; சாரதி கைது!



(புத்தளம்)

புத்தளம் பாலாவியிலிருந்து கல்டி சென்ற மோட்டார் சைக்கிள் பாலாவி விமானப்படை முகாமிற்கு முன்பாக லொறியில் மோதி விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் மாலை கல்டியிலிருந்து பாலாவி நோக்கிச் சென்ற லொறியுடன் பாலாவியிலிருந்து கல்டி சென்ற மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி குறித்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில் விபத்துக்குள்ளானவர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அட்டவில்லுப் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார். உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டதுடன் விபத்து தொடர்பில் லொறி சாரதியை பொலிஸார் கைது செய்தனர். (இ-7)

# நாமல் பேபி மாறிவிட்டார்!

## ஹரின் சீண்டல்

(கொழும்பு)

அரசாங்கத்தின் இயலாமை கடந்த நவம்பர் 16 ஆம் திகதியிலிருந்து அம்பலமாகி வருகிறதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்துடன் கோட்டாபயவுக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களே, உங்களுக்கு இப்போது சந்தோசமா? எனக் கேட்ட ஹரின் ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் பைலாக்கள் ஒவ்வொன்றாக வெளியில் வருகின்றதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நாமல் பேபி நன்றாகவே மாறிவிட்டார் என்றும் அவர் காரில் செல்வதில்லை, விகாரைகளுக்கு பெயின்ட் அடிப்பதில்லை, ஏன் மோட்டார் சைக்கிளிலும் செல்வதில்லை என்றும் குறிப்பிட்ட ஹரின்,நாமல், டிப்பெண்டரில் சுற்றிச்சுற்றி வருவதாகவும் கூறினார்.

மேலும் நாமலின் டிப்பெண்டரை சுற்றி, பல டிப்பெண்டர்கள் செல்வதாகவும் 69 இலட்சம் வாக்களித்த மக்களே! உங்களுக்கு இது போதுமா? என்றும் கேள்வியெழுப்பினார். (இ-7)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் நீதிமன்றில் சரண்

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் பேர்ள்.கே.வீரசிங்க கொழும்பு நிரந்தர நீதாய நீதிமன்றத்தில் நேற்றுச் சரணடைந்தார்.

அலி ரொஷனின் விசாரணை தொடர்பான அனைத்து ஆவணங்களையும் இன்று நீதிமன்றில் சமர்ப்பிப்பதாக உறுதியளித்ததையடுத்து பிடியாணை திரும்பப் பெறப்பட்டது.

இதேவேளை நேற்று விசாரணையின்போது, அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு தமது செயற்பாடுகளில் தலையிட நீதிமன்ற அதிகாரம் இல்லை என சட்டமா அதிபர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொரோனா அச்சத்திலும் இலங்கையில் சுதந்திரமாக நடமாடும் சீனப் பிரஜைகள்

## விஜித ஹேரத் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இத்தாலி, தென்கொரியா மற்றும் ஈரானிலிருந்து வருபவர்களைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துகின்ற போதும் சீனாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவதில்லை என ஜே.வி.பி. குற்றம் சாட்டியது.

மேலும் இந்த வைரஸ்தொற்று உருவாகிய சீனாவிலிருந்து வருபவர்கள் இலங்கையில் சுதந்திரமாக உள்ளனர் என அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றம்சாட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "சீனப் பிரஜைகள் சுதந்திரமாக இருப்பதற்கு இலங்கையில் இடமளிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் பாங்கொக் மற்றும் ஹொங்கொங் ஊடாக விமானம் மூலம் சுமார் 60 சீனப் பிரஜைகள் நாட்டுக்கு வந்தனர்.எனினும் , அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை. சுகாதார அமைச்சால் விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் இத்தாலி, தென் கொரியா மற்றும் ஈரான் முதலான நாடுகளிலிருந்து வரும் பயணிகளை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்த வைரஸ் தொற்று உருவாகிய சீனாவிலிருந்து வருபவர்கள் குறித்து குறிப்பிடப்படவில்லை. அவர்கள் இலங்கையில் சுதந்திரமாக உள்ளனர்" என விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார். (இ-7)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 01.03.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

அமரர்.திருமதி.சிவபாக்கியம் மாரிமுத்து ஆச்சாரி (செல்லையா)



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 15.03.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கிராமக்கோடு,
சமுர்த்தி வங்கி முன்பாக,
புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை. (C-9468)

சிவகுமாரன் குடும்பத்தினர்
(மருமகன்) யாழ்ப்பாணம்
076 963 5652



நீங்காத நினைவலைகள்

33ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04.12.1928 மறைவு 02.05.1987

அமரர்.சி.மார்க்கண்டு

மின் அத்தியச்சகர் இலங்கை மின்சாரசபை

பிரிவின் துன்பத்தை மட்டும் அல்ல
இறப்பின் துயரத்தையும்
எமக்கு விட்டுச் சென்ற
திடீர் மறைவின் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

10ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02.01.1935 மறைவு 03.03.2010

அமரர்.மார்க்கண்டு பவனேஸ்வரி

இமை மூடும் நேரத்தில்
எங்களை விட்டுப் பிரிந்தீர்கள்
நாங்கள் இருக்கும் வரை
உங்கள் நினைவில்
தான் இருப்போம்
என்றும் நீங்கா நினைவுகளுடன்

"சீதா பவனம்"
சூறாவத்தை, சுன்னாகம். (2482)

குடும்பத்தினர்.



17 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்.கா.சந்திரராசா SLAS

(ஓய்வு நிலை பிரதேச செயலர் -வலி.மேற்கு சங்கானை,
நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் UNHCR )

மண்ணுலகில் 1939.01.30 விண்ணுலகில் 2003.02.19

திதி.திருதியை.2020.03.12



அன்புடனும் பண்புடனும்
அறிவுரைகள்
கூறி எமை அரவணைத்து
வளர்த்த அப்பாவே
அவசரமாய் எம்மைவிட்டு
அரனடி அடைந்து
ஆண்டுகள் பதினேழு
ஆகிவிட்டதைய்யா
ஆனாலும் உம் நினைவு
எமைவிட்டகலவில்லை
என்றென்றுமுமை மறவோம்
மறவோமப்பா...
பொன்னாலை ஆண்டவன் பாதமதில்
உங்கள் ஆத்மா சாந்தி
அடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

(2567)

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

குடும்பத்தினர்

# கீரிமலை மெய்கண்டார் ஆதீனம் மாசி மகம் அன்று மீளுருவாக்கம்





(யாழ்ப்பாணம்)

கீரிமலை மெய்கண்டார் ஆதீனம் மீள் உருவாக்கம் பெற்று 3 ஆம் குருமகா சந்தானமாக தவத்திரு உமாபதி சிவம் அடிகளார் பதவியேற்கும் நிகழ்வு மாசி மகம் நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை கீரிமலை குழந்தைவேல் சுவாமி சிவாலய ஈழத்து தமிழ் சித்தர் பீடத்தில் இடம் பெற்றது.

அகில இலங்கை சைவ மகா சபையின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந் நிகழ்வில், தென் கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளாரால் உமாபதி சிவம் மூன்றாம் குருமகா சந்தானமாக சிவஞான தீக்கை வழங்கி திருநிலைப்படுத்தப்பட்டார். சிவத்தமிழ் சிவாச்சாரியார்கள் பன்னிருவர் இணைந்து மேற்கொண்ட செந்தமிழ்யாகத்துடன் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை சேர்ந்த துறவிகள், குருமார்கள், ஆலய தர்மகர்த்தாக்கள், கல்வியியலாளர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், சிவதொண்டர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதில் 20 பேர் அடங்கிய ஆதீன செயலணியும் உருவாக்கப்பட்டது.

மெய்கண்டார் ஆதீனம் தமது ஆன்மீக மனித நேயத் தளங்களில் சிறப்பாக பணியாற்றுவதற்கான செயற்றிட்டங்களை இச் செயலணியினர் தயாரித்து வழங்கி சைவத் தமிழர்களின் வாழ்வியலில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவர் என இங்கு கூறப்பட்டது. இதேவேளை, யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பேராசிரியர் சிறி.சற்குணராசா, இங்கு கருத்து தெரிவிக்கையில், மெய்கண்டார் ஆதீனத்தின் மீள் உருவாக்கம் சைவர்கள் தங்கள் மண்ணில் தம் பாரம்பரியத்தை காக்கும் வரலாற்று தேவையை நிறைவுசெய்ய இன்றியமையாதது எனத் தெரிவித்தார். (இ-7)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## நோய் தீர்க்கும் முத்திரைகள்

உடல் உழைப்பு இல்லாதவர்கள் மற்றும் உடற்பயிற்சி செய்ய முடியாதவர்கள் தங்கள் உடல் நலத்தைப்பேணுவதற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது யோகாசனக் கலையாகும். தினமும் யோகாசனம் செய்பவர்களுக்கு நோய் வருவது தடுக் கப்படுவதுடன் உடல் வலிமையும், மன வலிமையும் கைகூடுகிறது. யோகாசனங்கள் செய்யும் போது அதன் ஒரு அங்கமாக முத்திரை பயிற்சிகளும் செய்யப்படுகின்றன. யோகாசனங்களை செய்ய முடியாதவர்கள் முத்திரைகளை மட்டுமாவது செய்து பழகினால் உடல் நலம், மன நலம் பெறலாம். கைவிரல் நுனிகளை ஒன்றோடொன்று மெதுவாக அழுத்திப் பிடிப்பதே முத்திரைகளாகும்.


பிரபஞ்சம் பஞ்சபூதங்களாலானது. நம் உடலும் பஞ்சபூதங்களாலானது. நம் உடலில் உள்ள பஞ்சபூதங்களை சமநிலை படுத்தினால் நோய்நொடிகள் நம்மை அண்டாது. நம் உடலில் உள்ள பஞ்சபூத தத்துவங்களை சமன்படுத்த உதவும் கட்டுப்பாட்டு விசைகள் போல் அமைந்துள்ளன நம் கைவிரல்கள். கைவிரல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பூதத்தை குறிப்பதாக கூறப்படுகிறது.

கட்டைவிரல்- நெருப்பையும், ஆள்காட்டி விரல்-காற்றையும், நடுவிரல்- ஆகாயத்தையும், மோதிர விரல்- நிலத்தையும், சிறு விரல்- நீரையும் குறிக்கின்றன. இந்த பஞ்ச பூதங்கள் சமநிலையில் இருக்கும் போது உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

கைவிரல் முத்திரைகளை உட்கார்ந்திருக்கும் போதோ, நிற்கும் போதோ, நடக்கும் போதோ செய்யலாம். வஜ்ராசனம், பத்மாசனத்தில் அமர்ந்து செய்தால் அதிக நன்மை தரும். தினமும் 30 நிமிடங்கள் முதல் 45 நிமிடங்கள் வரை செய்தால் நல்ல பலன் கிடைக்கும். முத்திரைகள் செய்யும் போது இரு கை விரல்களையும் பயன் படுத்த வேண்டும்.

### ஞான முத்திரை

கட்டைவிரல் மற்றும் ஆள்காட்டி விரல் நுனிகள் இரண்டும் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டிருக்குமாறு மெதுவாக அழுத்திப்பிடிக்கவேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். இவ்வாறு கைவிரல்களை அழுத்திப்பிடிப்பதற்கு ஞான முத்திரை என்று பெயர். இந்த முத்திரைக்கு சின் முத்திரை என வேறு ஒரு பெயரும் உள்ளது.



ஞான முத்திரை செய்வதால் மூளைக்கு அதிக இரத்தம் பாயும். மூளையிலுள்ள செல்கள் புத்துணர்ச்சி பெறும். மூளை செயற்பாடு, ஞாபகசக்தி அதிகரிக்கும். மனம் எளிதில் ஒரு நிலைப்படும், தலைவலி, தூக்கமின்மை, கவலை கோபம் ஆகியவை நீங்கும். தியானம் பழகுபவர்களுக்கு மிகவும் உகந்த முத்திரையாகும்.

# யாழ்ப்பாண பெருந்திருவிழாவும் வண்ணையின் வசந்த விழாவும்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை அருள் மிகு ஸ்ரீவீரமாகளி அம்மன் தேவஸ்தானத்தின் யாழ்ப்பாண பெருந்திருவிழாவும், வண்ணையின் வசந்த விழாவும் எதிர்வரும் 28,29,30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குனி குளிர்த்தி தேரோட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில்நடைபெறவுள்ளது. வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து மாலை 5 மணியளவில் அம்பாள் வெள்ளி ரதத்தில் ஆரோகணமாகி கிராமப் பிரவேசம் இடம்பெறவுள்ளது. (இ-5)

# படகுச் சேவை நிறுத்தம்

## பொதுமக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு மற்றும் எழுவைதீவு ஆகியவற்றுக்கான பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டு வரும் எழுதாரகை படகுச் சேவை கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்படாமையால் பெரும்சிரமங்களை எதிர்கொள்வதாக பொது மக்கள் கவலை வெளியிட்டனர்.

ஊர்காவற்றுறை பிரதேசத்திற்குட்பட்ட அனலைதீவு மற்றும் எழுவைதீவு ஆகியவற்றுக்கான கடல் போக்குவரத்துக்களை மேற்கொள்ளும் பொருட்டு சேவையில் ஈடுபட்டு வந்த எழுதாரகை பயணிகள் போக்குவரத்துப் படகுச் சேவை கடந்த இருவாரங்களாக நிறுத்தப்பட்டுள்ளன.

தனியார் படகுகள் சேவையில் ஈடுபட்டு வந்தாலும் குறித்த படகுச்சேவை நிறுத்தப்பட்டுள்ளமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் தெரிவித்தனர். (இ-315)

# இராசி பலன்

**மீனம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாகங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

**மேடம்:** நண்பர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவீர், பொன்னான நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலம் சீராகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்,செய்தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடருவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், எதிர் பார்ப்புக்கள் நிறைவேறலாம்.

**இராசி பலன் — கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | சுக் | | ராகு |
| சூரி | | | |
| புத | | | |
| சனி,செவ் கேது,குரு | | | சந் |

சந்திராஷ்டமம்: பூரட்டாதி, உத்திரட்டாதி

**12.03.2020**

மாசி 29,வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

திருதியை மாலை 4.59 மணிவரை

சித்திரை முன்னிரவு 9.06

சுபநேரம்- 7.52-9.22 மணிவரை

இராகுகாலம்-1.52-3.22 மணிவரை

சக்கடகர சதுர்த்தி விரதம்

ஆசையின் வேகம் அனைத்தையும் பின் தள்ளும்.

வளவன்

**கடகம்:** இல்லத்தில் இனிய சம்வங்கள் நடைபெறும் வாய்புண்டு, ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மகரம்:** விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், உற்சாகத்தோட பணிபுரிவீர்கள், தொழில் சம்பந்தமாக முக்கிய நபர்களை சந்திப்பீர்கள்.

**தனுசு:** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், மதிப்பும் மரியாதையும் கூடும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**விருச்சிகம்:** செலவுகளில் தாராளம் காட்டவீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், தொழிலில் புதிய பொறுப்புகளை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், மங்கையர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், சுய முயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், போசன சுகமுண்டு.

# தீர்வு வரும் வரைக்கும் தமிழரின் இருப்பு முக்கியம்

## அங்கஜன் தெரிவிப்பு



(சாவகச்சேரி)

தீர்வு வரும் வரைக்கும் தமிழரின் இருப்பு முக்கியமானது. நான் மக்களின் இருப்பு சம்பந்தமாக அக்கறை உடையவன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தின் மைதான சுற்று மதிலுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை காலை பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட அங்கஜன் அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு தீர்வு பெற்றுத் தருவார்கள் என நீங்கள் நம்புகிறீர்களா? "என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீர்வு இன்றைக்கு வரும், நாளைக்கு வரும், அடுத்த பொங்கலுக்கு வரும் என்று காத்திருந் தோம். தீர்வு எப்போது வரும் என்று தெரியவில்லை. எடுத்துத் தருவார்களா? என்றும் தெரியவில்லை. தீர்வு வரும் வரைக்கும் காத்திருக்கத் தயார். ஆனால் தீர்வு வரும் வரைக்கும் எமது இருப்பு முக்கியம். தமிழரின் இருப்பு இருந்தால் தான் யார் தீர்வு பெற்றுத்தந்தாலும் அதனை அனுபவிக்க முடியும். நான் மக்களின் இருப்பு தொடர்பாக அக்கறை கொண்டவன்.

எங்களுடைய தமிழ் மக்களின் இருப்பு இருந்தால்தான் எமது இலக்கு நோக்கிப் பயணிக்க முடியும்.

தமிழரின் இருப்பிற்கு என்ன செய்ய வேண்டுமோ, அதை நோக்கிப் பயணிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

---

ரசனை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் - 01

"…. மனிதரைக் காவு கொண்டு மனிதத்தை விதைத்துச் சென்ற சுனாமி"




இயக்குனரும் சக கலைஞர்களும் பங்குபற்றும்

**விசேட திரையிடல்**

மார்ச் **14**
சனிக்கிழமை காலை 10.30
பருத்தித்துறை SS திரைக்கூடம்

மார்ச் **15**
ஞாயிற்றுக்கிழமை காலை 10.30
யாழ் ராஜா திரையரங்கு





இயக்கம் : சோமரத்ன திசாநாயக்க

அனுசரணை : Circle of Friends வடமராட்சி

கட்டணம் 300/= ஐ

---

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1983 இல் பிறந்த பிரான்சில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:- 076 059 3167 (2575)

---

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

---

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: பூரம் 3
கி.பா: 9 செவ் 4 ல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:Diploma in Accounting. Bachelor of Computer Engineering. Assemply Operator in Sydney.
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண்.
தொ.இ: B/10639

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சித்திரை 2
கி.பா: 33 செவ் 11 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. வெளிநாடு தனியார் நிறுவனம்
எதிர்பார்ப்பு: நல்ல குணமான படித்த பிள்ளை
தொ.இ: B/10640

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: செவ் 9 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. CALTEX விற்பனைப் பிரதிநிதி
எதிர்பார்ப்பு: சாதாரண பெண்
தொ.இ: B/10641

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 3 செவ் 2 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:பட்டதாரி
எதிர்பார்ப்பு: படித்த அரச உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/10642

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா:11 செவ் 9 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த.
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/10673

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: 1¾ செவ் 9 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த.
எதிர்பார்ப்பு: தொழில் செய்யும் மணமகன்
தொ.இ: G/10681

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 3
கி.பா: 25 செவ் 11 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: B.A. கொழும்பில் கொம்பனி கணக்காளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி உள்நாடு மட்டும். கொழும்பு விரும்பத்தக்கது.
தொ.இ: G/10682

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 29½ செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.B.M. final.. பொது முகாமைத்துவ உதவியாளர்.
எதிர்பார்ப்பு: பட்டதாரி. அரச உத்தியோகம்
தொ.இ: G/10685

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

---

# வேலை வாய்ப்பு

**தங்கம்மா முதியோர் இல்லம்**
**புதுக்குளம், கனகராஜன் குளம், வவுனியா வடக்கு**

### அலுவலக உத்தியோகத்தர் (மேற்பார்வையாளர்)

தகைமை:- A/L அல்லது அதற்கு மேல் படித்தவராக இருத்தல்
வயது 25 இற்கு மேல்.
தொலைபேசி, கணனி அடிப்படை அறிவு மிகமுக்கியம்.

- இல்லத்தில் முழு நேரமாக தங்கியிருத்தல் வேண்டும்.
- பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
- ஓய்வு பெற்ற பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் அரச உத்தியோகத்தர்கள் மிகவும் விரும்பப்படுவர்.
- நியாயமான சம்பளம், தனியான நவீன வசதி கொண்ட அறையும் உணவும் இலவசமாக வழங்கப்படும்.
- மாதம் மூன்று நாள் விடுமுறை.

### சமையல் வேலை

- முழு நேர சமையலாள் தேவைப்படுகிறது.
- அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும். 40 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
- முதியோர் இல்லத்தில் தங்கி இருத்தல் வேண்டும்.
- மாதம் 3 நாள் விடுமுறை, நியாயமான சம்பளம், இருப்பிடம், உணவு இலவசம்.

### முதியோர்களை சேர்த்தல்

- முதியோர்களுக்கான தங்குமிட வசதிகள் உண்டு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- 55 வயதுக்கு மேல் இருக்க வேண்டும்.
- கடுமையான நோயாளிகள் சேர்க்கப்படமாட்டார். உணவு, உடை, அடிப்படை மருத்துவம், தனியான நவீன வசதி கொண்ட அறைகள் உண்டு.

**தொடர்பு:- Dr. குணசிங்கம் 076 248 2766**
**முகாமையாளர் தவராயா: 077 449 9619** ஐ

---



**யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)**
**முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.**

### ஓட்டோக்களுக்கு வாடகை கட்டண மீற்றர் பொருத்துதல்

**ஓட்டோ உரிமையாளர்க்கு,**

எமது சங்கப் பதிவில் உள்ள தரிப்பிட சேவையில் ஈடுபடும் சகல ஓட்டோக்களுக்கும் வாடகைக் கட்டண மீற்றர் பொருத்தி சேவையில் ஈடுபடுமாறு யாழ்.மாநகரசபை, யாழ்.மாவட்ட செயலகம், வடமாகாண ஆளுநர் போன்ற நிர்வாகங்களால் பல தடவை எமக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. மேலும் தற்போது மிக அழுத்தம் திருத்தமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மீற்றர் பொருத்தாது பயணிகள் சேவையிலீடுபடும் ஓட்டோக்களின் தரிப்பிட சேவையும் மீள் பிரிசீலனைக்குட்படுத்தப்படும் நிலையும் ஏற்படும் சூழ்நிலை உள்ளதால் தயவு செய்து இதனை உதாசீனம் செய்யாது அனைவரும் எதிர்வரும் 31.03.2020 ஆம் திகதிக்குள் மீற்றர் பொருத்தியவர்கள் எமது சங்க சிபாரிசில் மீற்றர் பொருத்தியவர்கள் மாதாந்த கட்டுப்பண நிலுவை இருப்பின் உடன் செலுத்தி மீற்றரை இயங்க வைக்கவும். எமது சங்கத்தின் கீழ் உள்ள கிளைச் சங்கங்களும் இதனை கவனத்தில் கொள்ளவும்.

(சி-9465)

நிர்வாகம்.

# இலங்கையில் முதலாவது நோயாளி அடையாளம்!

# இத்தாலி சுற்றுலா குழுவின் வழித்தடத்தை தேடி விசாரணை

## கொரோனா பரவுவதைத் தடுக்க ஒத்துழைக்குமாறு அரசு கோரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் எனும் கொவிட் - 19 இலங்கையில் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், அதனைத் தடுப்பதற்காக ஆரம்பித்துள்ள நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அரசு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தது. இதுவரை உலகம் முழுவதும் பல நாடுகளில் இந்த வைரஸ் பரவியுள்ளது. அதனைத் தடுப்பதற்கு அந்நாடுகள் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான முதலாவது இலங்கையர் நேற்று முன்தினம் பிற்பகல் அடையாளம் காணப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். 52 வயதுடைய அவர் சுற்றுலா வழிகாட்டியாகச் செயற்பட்டுள்ளார். இத்தாலி நாட்டு சுற்றுலாக்குழுவுடன் அவர் வழிகாட்டியாக இணைந்து செயற்பட்டதுடன் தற்போது அந்த நோயாளி நோய்த்தடுப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். அவருக்கு அவசியமான சிகிச்சைகளை ஆரம்பித்துள்ளதாகவும் வைத்தியர் அனில் ஜாசிங்க மேலும் தெரிவித்தார்.

இத்தாலி சுற்றுலாக்குழு பயணித்த இடங்கள் மற்றும் சந்தித்த நபர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு அரசு முறையான திட்டத்துடன் கூடிய பரந்துபட்ட வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தது. அதற்காக நேற்று முன்தினம் முதல் தென்கொரியா, இத்தாலி மற்றும் ஈரான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து வருகை தருபவர்களை நோய்த்தடுப்புச் செயற்பாட்டுக்கு உட்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன், வெளிநாட்டில் இருந்து வருகை தருபவர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு அரசு வேண்டுகோள் விடுத்தது. (இ-7)

## கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை - நாமல்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் நாட்டுக்குள் பரவுவதைத் தடுப்பதற்காக அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட கண்காணிப்பு நிலையங்கள் தொடர்பாக மக்கள் அச்சமடையத் தேவையில்லை யென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ



தெரிவித்தார்.

உலகத்தையே அச்சத்தில் உறையவைத்துள்ள கொரோனா வைரஸ் தொற்றைத் தடுப்பதற்கு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் வைரஸ் பரவுவதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (இ-7)


## பொதுக்கூட்டம்

(குப்பிழான்)

**குப்பிழான் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று வியாழக் கிழமை மாலை 4 மணியளவில் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறும். (இ-18)**

## வீதியில் வீசப்பட்ட
## மீன் ரின்களால் மக்கள் பீதி!






(யாழ்ப்பாணம்)

நவாலி கொத்துக்கட்டி வீதிக் கருகில் மீன்ரின்கள் கொட்டப்பட்டுள்ளதால் மக்கள் பீதியடைந்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

நேற்று பிற்பகல் "படி" ரக வாகனத்தில் வந்த இனம் தெரியாத நபர்கள் மூடையில் கட்டி வந்த 2021.09.01 முடிவுத் திகதியிடப்பட்ட மீன்ரின்களை அப்பகுதியில் வீசி விட்டு சென்றதால் அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இதேவேளை பத்திற்கும் மேற்பட்ட மூடைகளில் மீன்ரின்கள் கட்டப்பட்டு குறித்த வாகனத்தில் கொண்டு வரப்பட்டதாகவும் மக்களின் நடமாட்டத்தால் அவற்றை அப்பகுதியில் வீசாது கொண்டு சென்றதாகத் தெரிய வருகிறது. (இ-2)

## கொரோனா வைரஸ் பீதியால் வெறிச்சோடிய பாடசாலைகள்

(ஏறாவூர்)

மட்டக்களப்பிலுள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் கொரோனா வைரஸ் தாக்கமுள்ள நாடுகளிலிருந்து வருபவர்கள் தங்கவைக்கப்படுகிறார்கள் என்ற செய்தி பரவியமையைத் தொடர்ந்து அப்பகுதி மக்களிடத்தில் அச்ச நிலைமை தோன்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மேலும் குறித்த தகவலால் நேற்றுப் புதன்கிழமை மட்டக்களப்பு நகர் பாடசாலைகளில், மாணவர்களின் வருகையில் வீழ்ச்சி காணப்பட்டதாகவும் தெரியவருகிறது.

மட்டக்களப்பில் அமைந்துள்ள ரிதிதென்ன இக்ராஹ் வித்தியாலயம், ஜெயந்தியாய அஹமட் ஹிராஸ் வித்தியாலயம், புனானை



அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் மாணவர் வருகை வீழ்ச்சியடைந்து, பாடசாலைகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

எனினும் குறித்த பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் வருகையில் மாற்றமிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவோம்!
### முத்துஹெட்டிகம நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் 150 ஆசனங்களைக் கைப்பற்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெறக் கூடிய வாய்ப்புக்கள் தென்படுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்தார்.

நெலுவ - அத்துரேகெதர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சி அரசியலில் இடதுசாரிகள் வலுவடைந்து, வலதுசாரிகள் சிதறிப் போயுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ பகிரங்கமாக மோதிக் கொள்ளும் நிலையில் நாட்டு மக்களின் எதிர்காலம் சுபிட்சமாக மாறவும் சௌபாக்கியமான நாட்டை உருவாக்கவும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைப்பதற்கான அடையாளங்கள் தென்படுகின்றன.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெறுவோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட பொதுஜன பெரமுன அதற்குத் தயாராகவுள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அதிகாரத்தைச் செலுத்துவது மாத்திரமல்ல, 10 ஆண்டுகள் முடிவடையாத பயணத்தை செல்லத்தயார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இணைந்து பணியாற்ற முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னம் இம்முறை வரலாற்றில் என்றுமில்லாத வாறு படுதோல்வியடையும் எனவும் முத்துஹெட்டிகம தெரிவித்தார். (இ-7)

# சாவகச்சேரி வைத்தியசாலை விபத்து தீவிர சிகிச்சைப்பிரிவு பணிகள் பூர்த்தியாகவில்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு வருகின்ற விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவின் பணிகள் பூர்த்தியாக்கப்படாமையால் பொதுமக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஏ-9 வீதியோடு இணைந்த மத்திய நிலையமாகக் காணப்படுவதாலும் பளை தொடக்கம் நாவற்குழி வரையான பகுதிகளில் இடம்பெறுகின்ற விபத்துக்கள் உள்ளிட்ட இதர மருத்துவ சேவைகளை வழங்குகின்ற மற்றும் அதிகளவான பொதுமக்களை உள்ளடக்கி சேவையாற்றுகின்ற காரணத்தாலும் (சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில்) விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டடத்திற்கு கடந்த 2016 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டு கட்டடம் அமைக்கப்பட்டது.


சாவகச்சேரியில் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு உருவாக்கப்பட்டால் பளை தொடக்கம் நாவற்குழி வரையான பகுதிகளில் இடம்பெறுகின்ற விபத்துக்களுக்கு சிகிச்சை எடுத்துக்கொள்ள முடியும் எனவும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களை அனுப்பி வைக்கும் எண்ணிக்கை குறைவடையும் எனவும் மக்களால் எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கான கட்டடப் பணிகள் நிறைவடைந்த போதிலும் உபகரணக் கொள்வனவு மற்றும் லிப்ற் வசதிகள் இன்னமும் பூர்த்தியடையாத நிலையில் காணப்படுகிறது.

எனவே பணிகளைப் பூர்த்தி செய்து தீவிர சிகிச்சைப் பிரிவை ஆரம்பிப்பதற்கு மேலும் 40 மில்லியன் ரூபாய் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து சிகிச்சைப் பிரிவை ஆரம்பித்து வைக்க உதவுமாறு பிரதேச மட்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின் போது வைத்தியசாலை நிர்வாகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கிக் கட்டடம், இயன் மருத்துவப் பிரிவுக் கட்டடம், ஆய்வு கூடப் பரிசோதனைக் கட்டடம், பல் வைத்தியப் பிரிவுக் கட்டடம், மாநாட்டு மண்டபம் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான விடுதி வசதி ஆகிய தேவைப்பாடுகளுடன் ஆளணிப் பற்றாக்குறையும் நிலவி வருவ்தாக ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி டயாளினி மகேந்திரனால் சுட்டிக்காட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-30)

# தீவிரமாகும் அடிப்படை மதவாதம்

## விக்டர் ஐவன் எச்சரிக்கை



(கொழும்பு)

நாட்டில் என்றுமில்லாத அளவிற்கு அடிப்படை மதவாதம் தீவிரமடைந்துள்ளதாக சிரேஷ்ட ஊடவியலாளர் விக்டர் ஐவன் எச்சரிக்கை விடுத்தார்.

நாட்டில் மிக மோசமான யுத்தம் ஒன்று இடம்பெற்ற போதிலும் அதிலிருந்து ஆட்சியாளர்கள் பாடம் கற்றுக் கொள்ளவில்லை எனக் குற்றம் சாட்டியுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன், ஆட்சியாளர்கள் நினைத்திருந்தால் யுத்தம் நிறைவுக்கு கொண்டு வந்ததன் பின்னர் நர்ட்டில் இனாங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தியிருக்க முடியுமெனத் தெரிவித்தார்.

நாட்டில் அதிகாரத்தில் இருந்த அனைத்துத் தரப்பும் அதிகாரத்தில் இல்லாத தரப்பும் இந்த முட்டாள்தனமான பயணத்தின் பங்குதாரர்களே என்றும் விக்டர் ஐவன் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் பன்மைத்துவ சமூகத்தில் பேச்சுச் சுதந்திரம் மற்றும் மதச் சுதந்திரம் தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கருத்தரங்கில் கலந்து கொண்ட நிலையிலேயே விக்டர் ஐவன், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்களவர்களின் சிந்தனையில் அநாகரிக தர்மபாலவும் தமிழர்களின் சிந்தனையில் ஆறுமுகநாவலரும் இருக்கின்றார்கள். அவர்கள் பிற்போக்கு சிந்தனையுடையவர்கள். அவர்கள் தொடர்பில் எவரும் பேசுவதில்லை. மாக்சிசவாதிகள் கூட ஒரு தரப்பை மாத்திரம் முன்னேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது தொடர்பில் சிந்தித்தார்களே தவிர இனத்தை முன்னேற்ற நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சிந்திக்கவில்லை.

ஒரு தரப்பு முன்னேறினால் இனம் முன்னேறும் என அவர்கள் நினைத்தார்கள். நாட்டில் மிகமோசமான இரத்தம் சிந்தப்பட்டது. சிங்களவர்கள் தெற்கிலும் தமிழர்கள் வடக்கிலும் இரத்தம் சிந்தினார்கள். எனினும் அதிலிருந்து நல்லதொரு படிப்பினையை நாம் கற்றுக் கொள்ளவில்லை.

2010 ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் காணப்பட்டன. எனினும் அந்த சர்ச்சைகள் தொடர்பில் எந்தவொரு அரசாங்கமும் இதுவரை தீர்வு காணவில்லை. நாட்டிற்கு மிகப்பெரிய மறுசீரமைப்பு அவசியம். யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் இந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு வாய்ப்பு கிட்டியது.

நாட்டில் அதிகாரத்திற்கு வந்த தரப்பும் அதிகாரத்தில் இல்லாத தரப்பும் இந்த முட்டாள்தனமான பயணத்தின் பங்குதாரர்களானார்கள் எனவும் அவர் தெரிவித்தார். இதுவே இன்று நாட்டிற்கு பெரும் பிரச்சினையாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் ஒவ்வொரு நாடும் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் பிரச்சினைகள் தொடர்பில் முன்னேற்பாடுகளை மேற்கொள்கின்றது. எனினும் எமது நாடு எந்தவொரு பிரச்சினை தொடர்பிலும் சிந்திக்காமல் தேர்தல் ஒன்றுக்கு தயாராகின்றது எனவும் தெரிவித்தார்.

மதம் என்பது இந்த நாட்டின் ஒரு துரதிர்ஷ்டமாக அமைந்துள்ளது. அவசியத்தை தாண்டிய மதவாதம் இந்த நாட்டிற்கு பிரச்சினையாக அமைந்துள்ளது. அனைத்து இன மக்களுக்கும் மதம் ஒரு பிரச்சினையாக அமைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)


# ஆண்டு ஒன்று ஆனதுவோ!

# அகம் நினைந்து தேடுகின்றோம்...



அமரர். ஸ்ரீமான்.பொன்னம்பலம்

## விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு

பண்டுலகு போற்றும்
பந்தமுறு வாழ்வில்
நீண்டு வந்த எம் பயணம்
ஈண்டு இலதாய் முடிவாகி
ஆண்டு ஒன்றும் ஆனதுவே!
ஆருயிரை நான் இழந்து நிற்க!
ஆசை அப்பாவை சேய்கள் இழந்து தவிக்க
நேசமுறு நல்வாழ்வு நகர்ந்தும்
ஆண்டு ஒன்றும் ஆனதுவோ!
ஆதரித்தாய் அறமுரைத்தாய் அன்பு தந்தாய்.
ஆலயத்தின் காவலனாய்
கணம் பிரியாப் பக்தனாய்

குலமகள் தன்னுடன் குலம் காக்கும்
மக்கள் மருகர் இணைந்திட
பேரர், பூட்டர் என்ற பெருவாழ்வின்
மங்காப் பேரொளியாய் வாழ்ந்த
மாமனிதர் நீங்கள் ஐயா!
மாண்டு, மரித்து மறைந்தாலும்
ஆண்டு ஒன்று சென்றாலும்,
ஆறாது துயர் எம்தனுக்கே!
எல்லோர் அகங்களிலும் ஆண்டு
திருவெண் காடுறைவோன்
பங்கமிலாப் பக்தனாய் நின்று
மங்காப் புகழுடன் வாழ்வீர்கள் என்றும்

தோற்றம்:- 14.10.1932
மறைவு:- 21.02.2019

"திருவெண்காடு"
மண்டைதீவு - 06

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(2568)

# அரச தொழில்வாய்ப்புக்களின் போது யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(முல்லைத்தீவு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு அரச தொழில் வாய்ப்புக்களின்போது கோரப்படும் தகுதி நிலைகளில் சற்று தளர்வினைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் எவ்வகையிலேனும் மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வினைக்காண வேண்டும் என்ற நோக்கிலேயே தன்னுடைய செயற்பாடுகள் அமைந்துள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும், வளம்நிறைந்த வன்னி மண்ணை வளம் கொழிக்கும் பிரதேசமாக மாற்றும் முயற்சியின் ஒரு கட்டமாக அங்கு காணப்படுகின்ற நன்னீர் மற்றும் உவர் நீர் நீர்நிலைகளை அபிவிருத்தி செய்து நீர் வேளாண்மையை விருத்தி செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு கடந்த வாரம் விஜயம் செய்த அமைச்சர் தேராவில், வள்ளுவர் புரம், குறவயல், மூங்கிலாறு, கைவேலி, மருதமடு, வேணாவில் ஆகிய பிரதேசங்களுக்கும் சென்று மக்கள் சந்திப்புக்களில் ஈடுபட்டார். அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வளம் நிறைந்த முல்லை. மண் கடந்த கால திறனற்ற தலைமைத்துவங்களின் வழிநடத்தல்களாலும் சுயநலன்களாலும் பாழாக்கப்பட்டுக் கிடக்கிறது. இந்த அவல நிலையிலிருந்து மக்களை மீட்டெடுத்து மக்களுக்கு சிறந்த வாழ்வியல் நிலையை உருவாக்கிக்கொள்ள சிறந்த பொறிமுறை இருக்கிறது. இந்த தூர நோக்குள்ள சிந்தனைக்கும் உழைப்பிற்கும் மக்கள் பூரண ஆதரவை வழங்க வேண்டும்என மேலும்தெரிவித்தார்.(9-281)




# குறைந்த செலவில் தீயணைப்பு வாகனத்தை உருவாக்கிய பிரதேச சபை



(நெளுக்குளம்)

சாதாரண தண்ணீர்த்தாங்கி வாகனம் ஒன்றில் தொழில்நுட்ப ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தி தீயணைப்பு வாகனமாக உருமாற்றம் செய்து வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் பரீட்சித்து பார்க்கப்பட்டது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் து.நடராஜசிங்கம், எமது பிரதேச சபைக்கு தீயணைப்பு வாகனம் ஒன்றின் அவசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூராட்சி ஆளுகை நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அவர்களது 5 இலட்சம் ரூபாய் நிதி உதவியுடன் பிரதேச சபையினரின் தொழில்நுட்ப அறிவினையும் பயன்படுத்தி குறித்த தீயணைப்பு வாகனம் உருவாக்கபட்டுள்ளது. குறைந்தளவு நிதியினை செலவளித்து இவ்வியந்திரத்தை உருவாக்கியுள்ளோம்.

குறித்த வாகனம் தீயணைப்பு வாகனத்தை ஒத்த வகையில் அதிதிறன் வாய்ந்தவாறு உருவாக்கப்பட்டுள்ளதுடன் பகல் வேளைகளில் 024 222 5737 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் இரவு வேளைகளில் 077 363 4511 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் தொடர்பு கொண்டு பொது மக்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று மேலும் தெரிவித்தார். (9-299)

# பாலதீவு அந்தோனியார் ஆலயத்துக்கு செல்வோருக்கான அறிவித்தல்

(பூநகரி)

பாலதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று ஆரம்பமாகியுள்ளதுடன் நாளை மறுதினம் 14 ஆம் திகதி திருவிழா திருப்பலியுடன் நிறைவடையவுள்ளது.

குறித்த திருவிழாவுக்கு செல்லும் பக்தர்களுக்கு பூநகரி பிரதேச செயலகத்தால் அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது கடலில் பயணிக்கும் போது பாதுகாப்பு கவசம் அணியவேண்டும், படகில் 9 பேருக்கு மேற்பட்டவர்கள் பயணிக்கக்கூடாது, குடிநீர்ப் பற்றாக் குறை காணப்படுவதால் நீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும், பிளாஸ்டிக் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

மேலும் 14 ஆம் திகதி மதியத்துக்குப்பின்னர் அங்கு யாரும் தரித்து நிற்க அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9-84)



வவுனியா வடக்கு கல்வி வலய பௌர்ணமி கலை விழா நெடுங்கேணி ஒலுமடு தமிழ் மகாவித்தியாலயத்தில் வவுனியா வடக்கு உதவி வலயக்கல்வி பணிப்பாளர் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

# வன்னி தேர்தல் தொகுதி முதன்மை வேட்பாளராக மஸ்தான் தெரிவு

(நெளுக்குளம்)

பொதுஜன பெரமுனவின் வன்னி தேர்தல் தொகுதிக்கான முதன்மை வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற வேட்பாளர்கள் தெரிவின்போது இத் தெரிவு இடம்பெற்றுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தானின் செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்கள் தெரிவு இடம்பெற்றிருந்தது. இதன்போது வவுனியா, மன்னார், முல்லைத்தீவை உள்ளடக்கிய வன்னி தேர்தல் தொகுதிக்கு மஸ்தானை முதன்மை வேட்பாளராகக்கொண்டு ஒன்பது வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.

கடந்த முறை ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பில் போட்டியிட்ட சிறுபான்மை சமூகத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரான மஸ்தான் இம்முறை பொதுஜன பெரமுனவின் மூலமாக வன்னி தேர்தல் தொகுதியில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(9-299)

# வவு.நகரசபை கட்டட தொகுதியின் மேல்தளம் இடிந்து வீழ்ந்ததில் பெண் படுகாயம்

(நெளுக்குளம்)

வவுனியா பழைய பேருந்து தரிப்பிடம் அமைந்துள்ள நகரசபை கட்டடத் தொகுதியின் ஒரு பகுதி நேற்று இடிந்து வீழ்ந்ததில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா நகரசபையின் கட்டடத் தொகுதியில் பல கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் அமைந்துள்ள நிலையில் கடை ஒன்றில் பொருட்களைக் கொள்வனவு செய்துகொண்டிருந்த பெண் மீது கட்டடத்தின் மேல் தளத்தின் ஒருபகுதி திடீரென உடைந்து வீழ்ந்துள்ளது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பாக கடை உரிமையாளர்; பொலிஸ் மற்றும் நகரசபைக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மற்றும் நகரசபை உத்தியோகத்தர்கள் காயமடைந்த பெண்ணை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையம் ஐம்பது வருட பழைமை வாய்ந்த கட்டடம். தற்போது கடந்த இரண்டு வருட காலமாக சீமெந்து மேல் பூச்சிலிருந்து இடையிடையே துண்டுகள் சில இடிந்து தலைமேல் வீழ்ந்து வருகின்றது. முதலாம் மாடியிலுள்ள தளம் உட்பட மேல் தளத்திற்கு அடிக்கப்பட்ட மட்டைசீட் சீரின்மை போன்ற பல்வேறுபட்ட குழறுபடிகள் காணப்படுகின்றன. இதனால் வியாபார நிலையத்திற்கு வருவதற்கு மக்கள் அச்சமடைந்து வருவதுடன் கட்டடப்பகுதியில் நடந்து செல்ல முடியாத நிலையும் தற்போது ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து கடந்த காலங்களில் நகர சபையினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோதும் போதியளவு நடவடிக்கை இடம்பெறவில்லை என வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து வவுனியா வர்த்தகர் சங்கத்தினருடன் தொடர்பு கொண்ட போது, அப்பகுதியிலுள்ள பாதிக்கப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்கள் இவ்விடயம் குறித்து எழுத்து மூலமான முறைப்பாடுகள் வர்த்தகர் சங்கத்தினருக்கு மேற்கொள்ளும் பட்சத்தில் இவ்விடயம் குறித்து நகர சபையினருடன் கலந்துரையாடி தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்என்று தெரிவித்துள்ளனர்.(9-250-299)



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 150 ஆவது ஆண்டு பூர்த்தி யூபிலி நிகழ்வின் ஓர் அங்கமான கல்வி கண்காட்சி நேற்றுப் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. குறித்த கண்காட்சி இன்று வியாழக்கிழமை மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளது. ஆரம்ப நிகழ்வில் விருந்தினர்களாக ஓய்வுபெற்ற சிரேஷ்ட இலங்கை வங்கி முகாமையாளர் மைக்கல் ஜோசப் மரியநாயகம், மன்னார் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார், மன்னார் வலய கல்விப்பணிப்பாளர் பிறட்லி, மன்னார் டிலாசால் சபை இயக்குநர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லாஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.(படங்கள்:- மன்னார் செய்தியாளர்)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மணல், கிரவல் அகழ்வதற்கான இடைக்காலத் தடை நீக்கம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட சுற்றுச் சூழல் செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் க.விமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பிரதேச செயலாளர்கள், கனிய வளத்திணைக்கள அதிகாரிகள், வனவளத்திணைக்கள அதிகாரிகள், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், பொலிஸார் உள்ளிட்ட அரச திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது கலந்துரையாடலின்படி மாவட்டத்தில் மணல் மற்றும் கிரவல் அகழ்விற்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் நடக்கும் அபிவிருத்தியினை மையாக வைத்து இங்குள்ள மக்கள் மண் அகழ்வுப் பணியினை தொடர்ச்சியாக மேற்கொள்ள புவிசரிதவியல் மற்றும் சுரங்கவியல் பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மணல், கிரல் அகழ்வு நடக்கின்ற இடங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குழு விஜயம் மேற்கொண்டு குழு சிபார்சிற்கு அமைய தெரிவு செய்யப்பட்ட இடங்களில் அபிவிருத்திக்கு எந்தத் தடங்கலும் ஏற்படாதவாறு அனுமதிப்பத்திரம் வழங்குமாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார். (9-28)




# போராளிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்

## முன்னாள் அமைச்சர் டெனிஸ்வரன் கோரிக்கை

(மன்னார்)

வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு உரிய சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி முன்னாள் வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன்; சம்பந்தன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவசர கோரிக்கை ஒன்றினை விடுத்துள்ளார். அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்ததற்குப் பின்னர் எமது புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள், மாவீரர் குடும்பங்கள் மற்றும் யுத்தத்தினால் மாற்றுத் திறனாளிகளாக ஆக்கப்பட்டவர்கள் மட்டில் ஓர் விசேட கருத்திட்டம் உருவாக்கப்படாமலும் முன்னுரிமை அடிப்படையில் ஓர் வாழ்வாதாரத்திட்டம் உரிய முறையில் தற்பொழுது வரை உருவாக்கப்படாமலும் இருந்து வருவது ஓர் பாரிய குறைபாடாகவே காணப்படுகின்றது.

எத்தனையோ வினைத்திறன் மிக்க புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளும் தளபதிகளும் குறிப்பாக வினைத்திறன் மிக்க பெண் போராளிகளும் எம்மத்தியில் தற்பொழுதும் வாழ்ந்து வருகின்றார்கள்.

மேலும் எந்தவொரு போராளியும் தனது சுயநலத்திற்காகவோ, தனது குடும்பத்தின் நலனுக்காகவோ போராடச் செல்லவில்லை. எம்மினத்திற்காக தங்களது உயிர்களையே துச்சமென மதித்த இவர்களிடம் ஒரு பொறுப்பை உரிய முறையில் ஒப்படைப்போமெனில் அதனை இவர்கள் எந்தவித அப்பழுக்குகளுமின்றி உயரிய சிந்தனையோடு செய்து முடிப்பார்கள்.

வடக்கு-கிழக்கில் இருக்கின்ற எட்டு மாவட்டத்திலும் உரிய சிறந்த போராளிகளைத் தெரிவு செய்து எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

# மகளிர் தின நிகழ்வு

(பனிக்கன்குளம்)

அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்துள்ள மகளிர் தின நிகழ்வுகள் "அவள் தைரியமானவள் நாட்டுக்கு பலமானவள்" எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவில் இடம்பெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறித்த மகளிர் தின நிகழ்வில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக உற்பத்திக் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் பெண்களின் உரிமைகளை வலியுறுத்தி முல்லைத்தீவு பொதுச் சந்தை முன்றலில் இருந்து மாவட்ட செயலகம் வரை நடை பவனியும் அதனைத் தொடர்ந்து மாவட்ட செயலக வளாகத்தில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் க.விமலநாதன், சிறப்பு விருந்தினராக உள்ளூர் உற்பத்திகள் ஊடாக சர்வதேச ரீதியில் புகழ்பெற்றுள்ள புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பெண் தொழில் முயற்சியாளர்கள் சாயிராணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (9-281)

# செட்டிகுள பிரதேச தெய்வீக கிராம நிகழ்வு




(குருமன்காடு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வெங்கலச் செட்டிகுள பிரதேச செயலகம் நடத்திய தெய்வீக கிராம நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை செட்டிகுளம் முகத்தான்குளம் ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றது. நந்திக் கொடியேற்றல், அறநெறிகீதத்துடன் நிகழ்வுகள்ஆரம்பமாகி ஆலய வழிபாடு, குருபூசை, கோமாதா பூசை, பிடி அரிசி சேமிப்பு, வஸ்திரதானம், ஞாபகார்த்த மர நடுகை முதலான பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

இரண்டாம் கட்ட நிகழ்வுகள் பிரதேச செயலாளர் கே.சிவகரன் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் பண்டிதர் வீ.பிரதீபனின் சிறப்பு சொற்பொழிவும் அறநெறி மாணவர்களின் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் அறநெறி ஆசிரியர்களின் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலாளர் சமன் பந்துலசேன, மேலதிக மாவட்ட செயலாளர் தி.திரேஸ்குமார், செட்டிகுள பிரதேச செயலாளர் கே.முகுந்தன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் சி.சண்முகநாதன், இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சிவ.கஜேந்திரகுமார், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கி.சற்சுருவேணு, கிராம உத்தியோகத்தர்களான எஸ்.பாலஸ்ரீ, திருமதி தேவகி மற்றும் ஆலய பரிபாலன சபை யினர், அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள், இந்து சமய ஆர்வ லர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250)



தருமபுரம் பொலிஸ் நிலையப் பொலிஸ் பரிசோதனை நிகழ்வு நேற்று முன்தினம் ,டம்பெற்றது. ,தில் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த சந்திரசேன கலந்துகொண்டார்.

அதனை தொடர்ந்து தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொது அமைப்புகளுடனான சந்திப்பு நடைபெற்றது. அதில் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர். ஒருமாத காலத்துக்குள் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(படங்கள்-தருமபுரம் செய்தியாளர்)

# மன்.விவசாய குழுக் கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட விவசாய குழுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் விவசாய செய்கை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. மேலும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் செயற்பாடுகள், கமநல அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள், விவசாய திணைக்களத்தின் செயற்பாடுகள், கால்நடை பராமரிப்பு தொடர்பான ஆராய்வு, பயிர் காப்புறுதி உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன. குறித்த கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள் உட்பட உரிய திணைக்களங்களின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9-285)

# கட்சி அலுவலகம் திறப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் நேற்று முன்தினம் ஸ்ரீடெலோ கட்சியினுடைய கட்சி அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கட்சியினுடைய அலுவலகத்திற்கான பெயர்ப் பலகையை வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையின் தவிசாளர் திறந்து வைக்க கட்டடத்தினை கட்சியினுடைய செயலாளர் நாயகம் ப.உதயராசா திறந்து வைத்தார்

ஸ்ரீடெலோ கட்சியினுடைய முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் த.நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (9-281)

# வேட்பாளர்கள் அறிமுகம்

(நெளுக்குளம்)

முன்னாள் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராஜ குகனேஸ்வரன் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின சாீ்பில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிமுக நிகழ்வு வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களைக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அறிமுகப்படுத்தியிருந்தார். அந்த வகையில் ஈ.பி.ஆர்.எல்.எப்.கட்சியின் மூலம் கடந்த 1994 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இராஜ குகனேஸ்வரன் மற்றும் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் குலசிங்கம் திலீபன், வவுனியா நகர பொதுச் சுகாதார பரிசோதகராக கடமையாற் றிய சி.கிரிதரன் ஆகியோர் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-299)



கலைஞர் ஒன்றுகூடல் நிகழ்வு மற்றும் மன்னல் நூல் வெளியீட்டு விழா நிகழ்வானது மன்னார் நகர் பிரதேச செயலாளரும் மன்னார் பிரதேச கலாசார பேரவையின் தலைவருமான பிரதீப் தலைமையில் மன்னார் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்திலுள்ள கலைஞர்களுடனான சந்திப்பு மற்றும் வருடா வருடம் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் வெளியிடப்படும் மன்னல் நூலானது வெளியீடு செய்யப்பட்டது.

(படம்-மன்னார் செய்தியாளர்)

# பாரதம்

## இத்தாலியை அச்சுறுத்தும் கொரோனா ஒரே நாளில் 168 பேர் உயிரிழப்பு


(ரோம்)

இத்தாலியில் கொரோனாவுக்கு ஒரே நாளில் 168 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை 631 ஆக அதிகரித்துள்ளது.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுகான் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது 100க்கும் அதிகமான நாடுகளில் பரவி மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கிவருகிறது.

கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உலகம் முழுவதும் இதுவரை 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். மேலும், ஒரு இலட்சத்து 10 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு வைரஸ் பரவியுள்ளது.

இதற்கிடையில், சீனாவுக்கு அடுத்தபடியாக ஐரோப்பிய நாடான இத்தாலியில் தான் கொரோனா கோரத்தாண்டம் ஆடுகிறது.



இந்நிலையில், கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு இத்தாலி நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 168 பேர் உயிரிழந்தனர்.

இதனால் அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை 631 ஆக அதிகரித்துள்ளது. மேலும், 10 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒரே நாளில் கொரோனாவுக்கு 168 பேர் உயிரிழந்துள்ளதால் இத்தாலி மக்கள் மிகுந்த அச்சமடைந்துள்ளனர்.

இதற்கிடையில், கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருவதையடுத்து இத்தாலி நாடு முழுவதும் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டு மக்கள் வீடுகளை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

## படகுகள் நேருக்கு நேர் மோதியதில் எழுவர் உயிரிழப்பு; 6 பேர் படுகாயம்



(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் உள்ள ஆற்றில் இரண்டு படகுகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

நெதர்லாந்து நாட்டின் அரச தம்பதிகள் இந்தோனேஷியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டனர்.

அந்நாட்டின் கலிமண்டன் மாகாணத்தில் உள்ள சில பகுதிகளையும் அரச தம்பதிகள் பார்வையிட உள்ளனர்.

இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை இந்தோனேஷிய அதிகாரிகள் மேற்கொண்டுவந்தனர்.

இந்நிலையில், அரச தம்பதிகள் பார்வையிட உள்ள கலிமண்டன் மாகாணத்தின் ஆற்றுபகுதியில் நேற்று முன்தினம் பாதுகாப்புப் படையினர் படகில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த ஆற்றில் வேகமாக வந்துகொண்டிருந்த சுற்றுலா பயணிகள் பயணம் செய்த படகு பாதுகாப்பு படையினர் இருந்த படகு மீது எதிர்பாராத விதமாக மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில், சுற்றுலா பயணிகள் வந்த படகு ஆற்றுக்குள் மூழ்கத் தொடங்கியது. அந்த படகில் பலர் சிக்கிக்கொண்டனர். இதையடுத்து, அங்கு இருந்த பாதுகாப்பு படையினர் உடனடியாக ஆற்றில் சிக்கித்தவித்தவர்களை மீட்டனர்.

ஆனாலும், இந்தச் சம்பவத்தில் சுற்றுலா படகில் பயணம் செய்த 7 பேர் உயிரிழந்தனர். மேலும், 6 பேர் படுகாயமடைந்தனர். (ஐ-2)

## சென்னை உயர் நீதிமன்றத்தால் நளினியின் மனு தள்ளுபடி

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தாம் சட்டவிரோதக் காவலில் இருப்பதாகக் கூறி நளினி தொடர்ந்த மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

தமிழக அரசின் பரிந்துரை மீது ஆளுநர் முடிவெடுக்காததன் காரணமாக தாங்கள் சட்டவிரோதக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தங்களை விடுதலை செய்ய உத்தரவிடக் கோரியும் நளினி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மனுவை, நேற்று புதன்கிழமை விசாரணைக்கு உட்படுத்திய உயர்நீதிமன்ற நீதிபதிகள் சுப்பையா, பொங்கியப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வு, மனுவை தள்ளுபடி செய்வதாக உத்தரவிட்டது.

தீர்மானத்தின் மீது ஆளுநர் முடிவெடுக்காதவரை, சட்டவிரோதக்காவல் என்று கருத முடியாது என்று தமிழக அரசு தரப்பிலும், நளினி உள்ளிட்ட 7 பேரும் சட்டவிரோதக் காவலில் இல்லை என்று மத்திய அரசும் உயர் நீதிமன்றத்தில் வாதாடியது.

மேலும், இந்த வழக்கில் தங்களது அனுமதியின்றி தமிழக அரசு தன்னிச்சையாக முடிவெடுத்து 7 பேரையும் விடுவிக்க முடியாது என்றும் மத்திய அரசு வாதிட்டது.

இவ்விரு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், ஆளுநரின் அதிகாரத்தில் தலையிட முடியாது. குறிப்பிட்ட காலத்துக்குள் முடிவெடுக்குமாறு ஆளுநருக்கு உத்தரவிட முடியாது என்று கருத்துகளை முன்வைத்திருந்தது.

அதனைத் தொடர்ந்தே முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதியாக சிறையில் இருக்கும் நளினி, சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில், 'கடந்த 28 ஆண்டுகளுக்கு மேலாக ஆயுள் தண்டனைக் கைதியாக சிறையில் உளளேன். ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற நான் உட்பட 7 பேரை முன்கூட்டியே விடுதலை செய்து தமிழக அமைச்சரவை கடந்த 2018ஆம் ஆண்டு செப்டெம்பர் 9ஆம் திகதி தீர்மானம் நிறைவேற்றியது.

இதற்கு ஒப்புதல் கேட்டு தமிழக ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் அமைதியாக இருந்து வருகிறார். இதனால்,சட்டவிரோத காவலில் சிறையில் இருக்கும் என்னை விடுதலை செய்யவேண்டும்' என்று கூறியிருந்தார். இந்த வழக்கை நீதிபதிகள் ஆர்.சுப்பையா, ஆர்.பொங்கியப்பன் ஆகியோர் விசாரித்து வந்தனர். ஏற்கனவே, இந்த வழக்கில் மத்திய அரசை நீதிபதிகள் தாமாக முன்வந்து எதிர்மனுதாரராக சேர்த்தனர். இதன்படி மத்திய அரசும், இந்த வழக்கில் பதில் மனுவை தாக்கல் செய்தது.

இந்தநிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் முன்பு கடந்த மாதம் விசாரணைக்கு வந்தபோது நளினி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி எம்.ராதாகிருஷ்ணன், ''நளினி உட்பட 7 பேரை விடுதலை செய்ய வேண்டும் என தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி, அதை சட்டப்படி ஒப்புதலுக்காக ஆளுநருக்கு அனுப்பி வைத்த பின்னரும், 7 பேரையும் சட்டவிரோதமாக சிறைக்குள் அடைத்து வைத்திருப்பது நியாயமற்றது. அமைச்சரவை எடுக்கும் முடிவுகளுக்கு மாநில ஆளுநர் கட்டுப்பட வேண்டும் என பல்வேறு தீர்ப்புகளின் வாயிலாக உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

நளினி உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என அரசே தீர்மானம் நிறைவேற்றியபிறகு, அதில் ஆளுநர் கையெழுத்துப் போடக்கூடத் தேவையில்லை. அமைச்சரவையின் முடிவு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் தமிழக அரசே தன்னிச்சையாக முடிவெடுக்கலாம். எனவே சட்டவிரோதமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினியை உடனடியாக விடுவிக்க உத்தரவிட வேண்டும்" என்று வாதிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## அமைதி நடவடிக்கை எதிரொலியாக ஆப்கானில் 1500 தலிபான்கள் விடுதலை

### ஜனாதிபதி உறுதிமொழி


(காபூல்)

அமைதி நடவடிக்கை எதிரொலியாக ஆப்கானிஸ்தானில் 1500 தலிபான்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என ஜனாதிபதி அஷ்ரப்கனி தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் கடந்த 18 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. தலிபான் பயங்கரவாதிகளுக்கும், அமெரிக்க இராணுவத்தின் உதவியுடன் செயற்படும் அரச படைகளுக்கும் இடையே தொடர்ந்து கடும் சமர் நடைபெற்று வருகிறது. இதில் ஆயிரக்கணக்கானோர் பலியாகினர். இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர்.

இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வந்து அமைதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அமெரிக்கா மற்றும் தலிபான்களுக்கு இடையே உடன்பாடு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறி வருகிறது.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் அரசும், தலிபான் பயங்கரவாதிகளும் பேச்சுவார்த்தை நடத்தி நிலையான் அமைதி ஏற்படுத்த அஷ்ரப்கனி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.



நாட்டில் அமைதி ஏற்படுத்த சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் 1500 தலிபான் பயங்கரவாதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என ஜனாதிபதி தெரிவித்தார்.

அரச படை மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதலில் ஈடுபட மாட்டோம் என எழுத்து மூலம் உத்தரவாதம் அளிப்பவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை இன்னும் 4 நாட்களில், தொடங்குகிறது. தினமும் 100 தலிபான் கைதிகள் விடுவிக்கபபடுவார்கள். இதன்மூலம் 15 நாட்களில் 1500 பேர் விடுதலையாவார்கள்.

பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டு அமைதி திரும்பும் பட்சத்தில் ஒவ்வொரு 2 வாரத்திலும் 500 பேர் வீதம் விடுவிக்கப்பட உள்ளனர். அதன் மூலம் 5 ஆயிரம் தலிபான்கள் விடுதலை செய்யப்படுவார்கள். (ஐ-2)


# வெளிநாடு

## கொரோனா வைரஸ் பற்றிய செய்தித்துளிகள்

### கொரோனா வைரஸ் பீதி ஈரானில் 70 ஆயிரம் கைதிகள் விடுதலை



### கொரோனா ஜம்முவில் உள்ள திரையரங்குகளை மூட உத்தரவு




### இந்தியாவில் கொரோனா நோயாளிகள் எண்ணிக்கை 61 ஆக உயர்வு



### டில்லியில் கொரோனா பீதியில் களையிழந்த ஹோலி கொண்டாட்டம்



### ட்ரம்புக்கு கொரோனா பரிசோதனை வெள்ளை மாளிகைவிளக்கம்



## சட்டவிரோதமாக ஐரோப்பாவினுள் நுழைய முயன்றோர் தடுத்து நிறுத்தம்



(ஏதென்ஸ்)

துருக்கியில் இருந்து கிரீஸ் எல்லை வழியாக சட்டவிரோதமாக ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற 963 பேரை பாதுகாப்புப் படையினர் தடுத்து நிறுத்தினர்.

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் மிகவும் முக்கிய இடமான இட்லிப் மாகாணத்தை கைப்பற்ற அந்நாட்டு அரசபடைகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றன. கிளர்ச்சியாளர்கள் குழுக்கள் மீதும் ரஷ்ய உதவியுடன் சிரிய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. ஆனால், கிளர்ச்சியாளர்களுக்கு துருக்கி ஆதரவு அளித்து வருகிறது.

இந்த போரில் நேட்டோ படைகள் தனக்கு ஆதரவு அளிக்காததால் துருக்கி ஜனாதிபதி தனது நாட்டில் உள்ள அகதிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல எந்தத் தடையும் இல்லை என அறிவிப்பை வெளியிட்டார். மேலும், ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் எல்லைகளையும் திறந்தார்.

இதனால் ஆப்கானிஸ்தான், சிரியா, ஈரான் நாடுகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான அகதிகள் துருக்கியையும், ஐரோப்பாவையும் இணைக்கும் நாடாக உள்ள கிரீஸ் எல்லையை நோக்கி படையெடுத்தனர். அகதிகளின் எண்ணிக்கை அதிகமானதால் கிறீஸ் தனது எல்லைகளை அடைத்தது. மேலும், அகதிகள் தங்கள் நாட்டு எல்லைக்குள் நுழையவும் தடை விதித்தது.

ஆனாலும், அகதிகள் அத்து மீறி சட்டவிரோதமாக எல்லை வேலிகளை தாண்டி கிறீஸ் நாட்டிற்கு நுழைகின்றனர். இதனால், கிறீஸ் இராணு வத்தினர் இருநாட்டு எல்லையில் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், துருக்கியில் இருந்து சட்ட விரோதமாக ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற 963 அகதிகள் எல்லையில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக கிறீஸ் நாட்டு பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

அகதிகளாக நுழைய முயன்றவர்களில் பெரும்பாலானோர் சிரியா, ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்களாவர். சட்டவிரோதமாக கிறீஸ் நாட்டிற்குள் நுழைய முயன்றவர்களில் 52 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், எஞ்சியவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்திடம் இருந்து கூடுதல் நிதி வாங்கவே துருக்கி தங்கள் நாட்டில் உள்ள அகதிகளை ஐரோப்பிய நாடுகளை நோக்கி அனுப்புவதாக குற்றச்சாட்டுகள் எழுந்தவண்ணம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## சிரியாவிற்கு படைகளை அனுப்ப மாட்டோம்

### பின்வாங்கியது அமெரிக்கா



(வோஷிங்டன்)

சிரியாவின் இட்லிப் மாகாணத்திற்கு தங்கள் நாட்டு தரைப் படைகளை அனுப்பும் எண்ணம் இல்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் மிகவும் முக்கிய இடமான இட்லிப் மாகாணத்தை கைப்பற்ற அந்நாட்டு அரசப்படைகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றன.

கிளர்ச்சியாளர்கள் குழுக்கள் மீதும் ரஷ்யா உதவியுடன் சிரியா இராணுவம் தாக்குதல் நடத்திவருகிறது. ஆனால், கிளர்ச்சியாளர்களுக்கு துருக்கி ஆதரவு அளித்து வருகிறது.

சிரியா மற்றும் துருக்கி என இரு நாடுகளுக்கும் இடையே நடந்த போரில் 50 இற்கும் அதிகமான இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். இந்தப் போரில் சிரியப் படைகளுக்கு ஆதரவு அளிக்கும் ரஷ்யா, கிளர்ச்சியாளர்களையும் துருக்கிப் படைகளையும் குறிவைத்து அதிரடித் தாக்குதல்களை நடத்தியது.

இட்லிப் மாகாணத்தில் நடைபெற்ற போரை நிறுத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் துருக்கி ஜனாதிபதி தாயிப் எர்டோகன் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இதனால் கடந்த சில நாட்களாக இட்லிப் பகுதியில் எந்தவித தாக்குதல்களும் அரங்கேறவில்லை.

இதற்கிடையில், சிரியா விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் தங்களுக்கு இராணுவ உதவிகள் செய்யவேண்டும் என துருக்கி ஜனாதிபதி தாயிப் எர்டோகன் கோரிக்கை விடுத்திருந்தார்.

அவரது கோரிக்கையை நேட்டோ படைகள் நிராகரித்தன. ஆனால், அமெரிக்கப் படைகள் துருக்கிக்கு உதவியாக இட்லிப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படலாம் என எதிர் பார்க்கப்பட்டது.

இந்நிலையில், சிரியாவின் இட்லிப் மாகாணத்திற்கு தங்கள் நாட்டு தரைப்படைகளை அனுப்பமாட்டோம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அதிதீவிர நடவடிக்கைகள் தேவைப்பட்டாலே தவிர எக்காரணம் கொண்டும் அமெரிக்க தரைப்படைகள் இட்லிப்பிற்கு அனுப்பப்படமாட்டார்கள் என சிரிய விவகாரத்துக்கான அமெரிக்க சிறப்பு அமைச்சர் ஜேம்ஸ் ஜெப்பர் தெரிவித்தார்.

குர்திஷ்களின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் இட்லிப் உட்பட வடக்கு பகுதியில் இருந்த அமெரிக்க தரைப்படைகள் கடந்த ஆண்டு வெளியேறியமை குறிப பிடத்தக்கது. (ஜ-2)

# தூய்மையான அரசியலை உருவாக்க கட்சிகளுக்கு மார்ச் 12 இயக்கம் அழைப்பு

(மருதானை)

தூய்மையான அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கும் மார்ச் 12 இயக்கத்தின் இலட்சியத்தை நிறைவேற்ற சகல கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அந்த இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.




மார்ச் 12 இயக்கத்தின் 6 வருடப் பூர்த்தியை குறிக்கும் முகமாக இன்று வியாழக்கிழமை கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ள கலந்துரையாடலுக்கு கட்சிகளை அழைக்கும் ஊடக வியலாளா் சந்திப்பு நேற்று முன்தினம் மருதானை சமூக சமய கேந்திர மத்திய நிலையத்தில் இடம் பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நாடாளுமன்ற தேர்தல் தொடர்பில் இணையத்தில் பொய்ப் புரளி!

## தேசப்பிரிய காட்டம்

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக நாடாளு மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படலாமென சில இணையத்தளங்களில் வெளியான தகவல்களில் எந்தவித உண்மையும் இல்லையென தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

கொரோனாவை காரணம் காட்டி தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் தான் அறிவுறுத்தப் படவுமில்லை.

அப்படியான முடிவை ஆணைக்குழு ஆராயவுமில்லை எனத் தெரிவித்த ஆணைக்குழுத் தலைவர், அந்த இணையச் செய்தி புரளியெனவும் தெரிவித்தார்.

இவ்வாறான புரளிகளைப் பரப்பும் ஊடகங்கள் தொடர்பில் ஆணைக்குழு உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், கட்டு மீறிப் போகுமிடத்து அந்த இணையங்களை முடக்க நடவடிக்கை எடுக்க நேரிடலாமெனவும் அவர் எச்சரித்தார். (இ-7)



# 2025இல் சுற்றுலாத்துறையூடாக 10 பில். வருமானம் பெறத்திட்டம்



(கொழும்பு)

சுற்றுலாத்துறையில் 2025 ஆம் ஆண்டில் 10 பில்லியன் அமெரிக்க டொலரை வருமானமாக ஈட்டுவதை அடிப்படையாகக் கொண்டு விசேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்த இலக்கை அடைவதற்கான ஐந்தாண்டு உலகளாவிய தகவல் தொடர்பு திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 2025ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை மூலம் 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெறுவதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுமென கூறியிருந்தார். இதன் பிரகாரம் சுற்றுலாத்துறையை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

சுமார் 6 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் ஈர்ப்பதை அடிப்படையாகக் கொண்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. போருக்குப் பின்னரான கால கட்டத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆண்டு தோறும் அதிகரித்து வந்தது. சர்வதேச அளவில் சாதகமான நிலையே அன்று நிலவியது. இருப்பினும் கடந்த சில ஆண்டுகளில் இலங்கையில் சுற்றுலாத் துறை வீழ்ச்சியடைந்தது.

2016 ஆம் ஆண்டின் சுற்றுலாப்பயணிகளின் வருகை இலக்கு 2.5 மில்லியனாக இருந்தது. ஆனால் அது 2 மில்லியனாக வரையறுக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற தாக்குதல்களைத் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை 1.9 மில்லியனாகக் குறைவடைந்தது.

இந்த ஆண்டு ஜூன் நடுப்பகுதியிலிருந்து அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு உலகளாவிய தொடர்புத்திட்டம் செயற்படுத்தப் படும்.

பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், இந்தியா, சீனா, அவுஸ்ரேலியா, ரஷ்யா மற்றும் வளைகுடா நாடுகளுக்கான இலக்கு பயண முகவர் நிலையங்களை ஏற்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம். அதேபோன்று மேற்குலக நாடுகள் உட்பட உலகளாவிய ரீதியில் முக்கிய நாடுகளில் மக்கள் தொடர்பு நிலையங்களை அமைக்கத் தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சாப்பிட மறுக்கும் குழந்தைகள்

அம்மாக்களுக்கு அடிக்கடி ஏற்படுகிற கவலை ஒன்று உண்டு. அதாவது குழந்தைகள் சரியாக சாப்பிடமாட்டார்கள் என்கிற கவலை! இவர்கள் எல்லாம் ஒரு விடயத்தை நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். குழந்தைகள் பெரியவர்கள் மாதிரி இல்லை. அவர்கள் கடிகாரத்தில் மணியைப் பார்த்துவிட்டு சாப்பிட உட்காருகின்றவர்கள் இல்லை! பசித்தால் சாப்பிடுவார்கள். இல்லையென்றால் விளையாடுவார்கள். அல்லது தூங்குவார்கள்.

அது புரியாமல் அவர்களைக் கட்டாயப்படுத்தி அல்லது மிரட்டி சாப்பிட வைப்பது மிகவும் தவறு.ஒரு எட்டு மாத குழந்தைக்கு மூன்று மணி நேரத்துக்கு ஒரு தடவை பசிக்கும். அந்த நேரம் பார்த்து சாப்பாடு கொடுத்தால் அடம்பிடிக்காமல் சாப்பிடும்.

அதே குழந்தைக்கு ஒரு வயது ஆகும் போது நான்கு மணி நேரத்துக்கு ஒரு தடவை பசிக்கும். இந்த வயதிலே இயற்கையாகவே பசி குறைந்திருக்கும்... அது புரியாமல் "என் குழந்தை முன்பு மாதிரி சரியாகச் சாப்பிடமாட்டேன்" என்கிறாா் என்று சில பேர் வைத்தியர்களிடம் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

இன்னொரு விடயம். ஒரு குழந்தைக்கு வயது அதிகமாகும் வேகத்துக்கு உடல் எடையும் அதிகமாகிக் கொண்டே போகாது! உடல் எடை அதிகமாகும் வேகம் குறைந்து கொண்டே வரும். ஆறுமாதக் குழந்தைக்கு ஒரு வாரத்தில் 150கிராம் எடை கூடும்.

ஒரு வயதில் வாரத்துக்கு 71 கிராம் எடை கூடும். இது புரியாமல் அதிகமாகச் சாப்பாட்டைக் கொடுத்து குழந்தையை கஷ்டப்படுத்தக்கூடாது! ஏனென்றால் அளவுக்கு மீறிய உணவு அஜீரணத்தை உண்டாக்கும்.

குழந்தைக்கு ஒரு தட்டி சிறிது உணவை வைத்துக்கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். மலை மாதிரி குமித்து வைத்தால் அதைப் பார்த்ததுமே பசி அடங்கிப் போய்விடும்!

அடித்து – மிரட்டி – பயமுறுத்தி குழந்தையை சாப்பிட வைக்கிற பழக்கத்தால் குழந்தைக்கு சாப்பாட்டில் விருப்பம் குறைந்துவிடும். அதைக் கண்டாலே வெறுக்க ஆரம்பித்துவிடும்.

உளம் சார்ந்த பசிக்குறைவு ஏற்படும்! சாப்பாடே ஒரு தண்டனை மாதிரி தோன்றும். குழந்தைகளுக்கு பிடித்த மாதிரியான உணவைக் கொடுக்க வேண்டும். சத்து அதிகமாக இருக்கிறது என்பதற்காக குழந்தைக்குப் பிடிக்காத உணவைக் கொடுத்துக் கட்டாயப்படுத்தக் கூடாது.

குழந்தைகளுக்கு இரண்டு வயது ஆகும் போது இயற்கையாகவே "எதிர்மறை குணம்" உண்டாகும். இது போன்ற விடயங்களில் நாம் என்ன சொல்கின்றோமோ அதற்கு நேர்மாறாக நடந்து கொள்ளும். ஏட்டிக்குப் போட்டி! சாப்பிடச் சொன்னால் விளையாடப் போகும். விளையாடச் சொன்னால் சாப்பாடு கேட்கும்! இதைப் புரிந்து கொண்டு நடக்க வேண்டும். குழந்தை சொன்ன பேச்சைக் கேட்கவில்லையென்று கோபப் படக் கூடாது!

குழந்தை வளர வளர பிடிவாத குணம் வருவது சகஜம். கேட்டதை வாங்கிக் கொடுத்தால்தான் சாப்பிடுவேன் என்று பிடிவாதம் செய்யும். வாங்கிக் கொடுப்பதுதான் உத்தமம். நீங்களும் பிடிவாதம் செய்யக்கூடாது! ஏனென்றால் "கேட்டது கிடைக்கவில்லையே" என்ற ஏமாற்றம் கூட குழந்தையின் பசியைக் குறைத்துவிடும்! கேட்டது கிடைத்தால் பசி அதிகமாகும்! கொடுத்ததை மளமளவென்று சாப்பிட்டுவிடும்.

குழந்தைகளுக்கு கண்ட கண்ட நேரத்தில் சாப்பிடுவதற்கு எதையாவது வாங்கிக் கொடுத்துக் கொண்டிருந்தால் சாப்பாட்டு நேரத்தில் சாப்பிடாமல் அடம்பிடிக்கும்! பாடசாலை போகின்ற பிள்ளைகள் காலை உணவை சரி யாக சாப்பிடமாட்டார்கள். அச்சம் – அவசரம் – பரபரப்பு இதெல்லாம் தான் காரணம்! பாடசாலைக்குச் செல்வதற்கு ஒரு முக்கால் மணி நேரத்துக்கு முன்னால் சாப்பாடு கொடுத்தால் அது சரியாகிவிடும்.

படிக்கிற குழந்தைகள் உடல் சோர்வு – உளச்சோர்வு காரணமாகவும் சாப்பிட மறுக்கிறார்கள். உதாரணமாக மாலையில் விளையாடிவிட்டு வீட்டுக்கு வந்ததும் சாப்பிடச் சொன்னால் 'வேண்டாம்' என்பார்கள் !இது உடல்சோர்வு!

சிறிது நேரம் வீட்டுப்பாடங்களை செய்து முடித்த கையோடு சாப்பிடச் சொன்னாலும் அவர்களால் சரியாகச் சாப்பிட முடியாது! இது உளச்சோர்வு! இதைத்தவிர குழந்தைகளுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டாலும் சாப்பிட மறுப்பதுண்டு.

சில மருந்து மாத்திரைகளும்... பசியைக் குறைத்துவிடும். அதனாலே சரியாக தெரிந்து கொண்டு குழந்தைகளைச் சாப்பிட வைக்க வேண்டும். அது புரியாமல் கையிலே சாப்பாட்டு தட்டை வைத்துக்கொண்டு குழந்தைகளை விரட்டக்கூடாது.

ஒரு சின்ன பையன் சொன்னான் "எங்கள் அம்மா சாப்பாடு போடுவது தெரிந்தால் நான் உடனே வீட்டை விட்டு வெளியிலே ஓடிப் போய்விடுவேன்!" என்றான். "ஏன் அப்படி செய்கிறாய்?" என்று கேட்டேன்! "எங்கள் அப்பாவும் அப்படித்தான் சேர் செய்வார்!" என்றான்.


## சர்வதேச விசாரணை முழுமை பெறவில்லை

# பொறுப்புக்கூறலுக்கான நீதி விசாரணை இன்னும் ஆரம்பிக்கப்படவே இல்லை

## நாடுகடந்த தமிழீழ அரசு தெளிவுபடுத்தல்

(லண்டன்)

**இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை முழுமை பெறவில்லை என்பதோடு, பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச நீதி விசாரணை இன்னமும் ஆரம்பிக்கப்படவே இல்லை எனவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்தார்.**



ஐ.நா.மனித உரிமைச்சபையில் 43 ஆவது கூட்டத் தொடர் தற்போது இடம்பெற்றிருக்கும் இவ்வேளையில், இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று நடைபெற்றுள்ளதா? என எழுந்துள்ள வாதப்பிரதிவாதங்கள் தொடர்பில் ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2014 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைச்சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, ஆணையாளரால் நியமிக்கப்பட்ட Martti Ahtisaari, ( former President of Finland), Silvia Cartwright, (former High Court judge of New Zealand), Asma Jahangir (former President of the Human Rights Commission of Pakistan) ஆகிய அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டு 2015 ஆம் ஆண்டில் Report of the OHCHR Investigation on Sri lanka (OISL) அறிக்கை வெளிவந்திருந்தது.

இலங்கையில் அரசாங்க அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், மற்றவர்களை விசாரணை செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்பதோடு, யுத்தம் தொடர்பான ஆவணங்களை பார்வையிடவும் அனுமதிக்க வேண்டும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

குறிப்பாக (நம்பத்தகுந்த) பாரிய அளவில் பாலியல் வன்புணர்வுகள், சித்திரவதைகள் எனப் பாரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன எனவும் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

முக்கியமாக அந்த அறிக்கையில் பாவிக்கப்பட்ட சட்ட விதிகள் reasonable grounds to beli eve அடிப்படையில் நீதி முறையிலான விசாரணைகளை போதுமானதாக காணப்படுகின்றது. (இந்த விதிகளின் அடிப்படையில் தான் சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் ஆணையைப் பிறப்பிக்கின்றது).

குற்றங்கள் இடம்பெற்றுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், judicial investigation முறையில் பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச நீதி விசாரணை ஒன்றின் மூலம் குற்றங்களுக்கான பொறுப்பானவர்கள் இனங்காணப்பட்டு தண்டிக்கப்பட முடியும். இதனை OISL அறிக்கையின் பரிந்துரையின் 36 ஆவது சரத்தில் (under universal jurisdiction, investigate and prosecute those allegedly responsible for violations, such as torture, war crimes or crimes against humanity) விசாரணை செய்யப்பட வேண்டும் எனத் தெளிவாகக் குறிக்கப்பட்டது.

30/1 தீர்மானத்தின் 6 ஆவது சரத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதாவது. ( foreign judges, defence lawyers and aut horized prosecutors and investiga tors) வெளிநாட்டு நீதிபதிகள், சட்டத்தரணிகள், வழக்குத் தொடுநர்கள் மட்டுமல்ல விசாரணையாளர்களும் (investigators) தேவை எனத் தெரிவிக்கப்பட்டிருப்பதானது, நீதிமுறையிலான விசாரணையின் (judicial investi gation) அவசியத்தை வலியுறுத்துகின்றது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட தரவுகளின் அடிப்படையில், இரகசியமான முறையில் பெறப்பட்ட சாட்சியங்கள், வாக்கு மூலங்களின் அடிப்படையில் பாரதூரமான குற்றங்கள் இடம்பெற்றன என்பதை இதன் விசாரணை OISL அறிக்கையாகிய போதும் இது முழுமையான சர்வதேச விசாரணை.ஆகிவிடாது. judi cial investigation மூலமான பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச நீதி விசாரணை ஒன்றின் மூலமே இது முழுமையடையும்.

சர்வதேச விசாரணை முடிந்துவிட்டதா? இல்லையா? என்பது பற்றி வாதப்பிரதிவாதங்கள் செய்து கொண்டிருக்கின்ற காலம் இதுவல்ல. இந்த வாதத்துக்கான தேவை ஏன் எழுகின்றது என்பது புரியவில்லை.

ஜெனிவாவில் நமக்கான நீதி கிடைக்கும் என்று நம்பிக் கொண்டும், காத்துக் கொண்டும் இருக்க முடியாது. ஜெனிவாவையும் ஒரு களமாக கையாள்வது போல், வேறு நீதிக்கான களங்களை நாம் திறக்க வேண்டும்.

சர்வதேச நாடுகள் தமது நலன்களின் அடிப்படையில் ஜெனிவாவில் எடுக்கின்ற முடிவுகளுக்கும் அவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கும் அமைய, எமது செயற்பாடுகளை அமைத்துவிட முடியாது. நமக்கான நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் ஜெனிவாவை ஒரு களமாகப் பாவிக்க வேண்டியுள்ளது. சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சி நிரலில் அமைந்துள்ள Transitional justice பொறிமுறையை நாம் கோரவில்லை. ஈடுசெய் Remedial justice நீதிப் பொறி முறையைத்தான் நாம் கோரியிருந்தோம். இது நமது நிகழ்ச்சி நிரல். இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலோ அல்லது ஐ.நாவின் இனப்படுகொலை தடுப்புக்கான உடன்பாட்டுக்கு அமைய, அனைத்துலக நீதிமன்றத்தில் நிறுத்துதல், அரசியல் தீர்வுக்கான பொது வாக்கெடுப்பு ஆகிய நிகழ்ச்சி நிரலின் உள்ளம்சங்களாகவுள்ளன.

மேலும் இலங்கையில் காணப்படுவது பௌத்த பேரினவாத இனநாயகமே அன்றி ஜனநாயகம் அல்ல. சிங்கள தேசத்தின் ஜனநாயகத்தை மீட்டெடுப்பதல்ல தமிழர் தேசத்தின் நோக்கம். அது மேலும் மேலும் இலங்கையில் சிங்கள பௌத்த இனநாய கத்தையே இறுக்கமடையச் செய்யும். நமக்கான நீதிக்காகவும் அரசியல் இறையாண்மைக்காகவும் போராடுவதே தமிழர் தேசத்தின் தேவை என உருத்திரகுமாரன் மேலும் இடித்துரைத்தார். (இ-7)

## சஜித்தின் சக்தியின் செயற்பாட்டிற்கு ஐ.தே.க.தடையாக இருக்கவில்லை


### பாலித ரங்கே விளக்கம்

(கொழும்பு)

பொதுக் கூட்டணி அமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் செயற்குழுவும் முழு ஆதரவையும் பெற்றுக் கொடுத்திருந்த போதும் பொதுக் கூட்டணியாக இல்லாமல் தனிக் கட்சியாகப் பதிவு செய்ததன் காரணமாகவே முரண்பாடு தோற்றம் பெற்றுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளுக்கு கட்சியில் தடைகள் ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படுவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த விடயம் தொடர்பில் நாம் எந்தவொரு விவாதத்திலும் கலந்து கொண்டு வாதிடத் தயாராக உள்ளோம்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயற்படுவது தொடர்பில் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரியவின் தலைமையில் இரு தரப்பினர்களுக்கும் இடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.



இதன்போது இரு தரப்பின் யாப்புகளிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## சிறைச்சாலை அத்தியட்சகரின் 25 ஆயிரம் ரூபாய் பணத்தை திருடிய கைதி தப்பியோட்டம்

(ஏறாவூர்)

தண்டனை வழங்கப்பட்ட சிறைக் கைதி ஒருவர் சிறைச்சாலை அத்தியட்சகரின் 25 ஆயிரம் ரூபாய் பணத்தை திருடிக் கொண்டு தப்பியோடிய சம்பவம் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இடம்பெற்றதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த சிறிமால் என்ற சிறைக் கைதி கொள்ளைச் சம்பவம் தொடர்பாக கண்டியில் கைது செய்யப்பட்டு ஒருவருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் குறித்த கைதியை மட்டக்களப்பு சிறைச்சாலையில் 4 மாதங்களாக அடைக்கப்பட்டு தண்டனை பெற்றுவரும் நிலையில் சிறைச்சாலைக்கு முன்னாலுள்ள அத்தியட்சகரின் காரியாலயத்தை சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

இந்த நிலையில் வழமை போல சுத்தப்படுத்தும் வேலையில் ஈடுபட்ட நிலையில் சிறைச்சாலை அத்தியட்சகரின் 25 ஆயிரம் ரூபாய் பணத்தை திருடிக் கொண்டு தப்பியோடினார்.

இதனையடுத்து தப்பியோடிய கைதியைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

18

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இப் பிரச்சினைகளுக்கான மாற்றுத்திட்டமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார்.

- வரி அறவிடும் மற்றும் வருமானத்தை ஈட்டும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதற்கு வேறு வகைகளில் நிதியை வழங்குவதற்கும் சந்தர்ப்பங்களை வழங்குதல்.
- நிரல் அமைச்சுத் திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட அளவுகோள்களை அடிப்படையாகக் கொண்டு நிதி ஒதுக்கீடு செய்தல். அதேசமயம், மாகாண சபைகளின் பிரதிநிதித்துவத்துடன் தேசிய நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுடன் மாத்திரம் திறைசேரியின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்தலும், அவற்றிற்கு வெளியே நிதி ஒதுக்கீடு செய்யாமை.
- மாகாண சபை விடயங்களுக்கு உரித்தான நிதி ஒதுக்கீடு செய்தலை மத்திய அரசின் கீழ் வேறு அமைச்சுக்களுக்கோ திணைக்களங்களுக்கோ நிதி ஒதுக்காமை.
- அரசு எதிர்நோக்கும் நிதி நெருக்கடிகளின்போது மத்திய அரசின் அமைச்சுக்களிலிருந்தும் திணைக்களங்களிலிருந்தும் குறைக்கும் சதவீதத்திற்கு சம அளவிலான நிதியை மாத்திரம் மாகாண சபைகளிலிருந்து குறைத்தல்.
- மாகாண சபைகளுக்கு மேற்படி அதிகாரத்தை முழுமையாக ஒப்படைத்தல்.
- வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் அளவுகோள்களின் கீழ் (அதாவது தேசிய பாதுகாப்பு, அரசியல் தக்க வைப்பின் தாக்கங்கள் ஏற்படாத வகையில்) கிடைக்கும் வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் மாகாண சபையின் பிரதம செயலாளரின் முழுமையான அதிகாரத்துடன் அமுலாக்கப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்டவை '2008'- 20 ஆம் ஆண்டு அனுபவங்களின் அடிப்படையிலான தேசிய பரிந்துரைகள் என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டதாக குறிப்பிடுகிறார். மேலும் அவரின் கருத்துப்படி 2008 ஆம் ஆண்டின் அனைத்து மாகாண சபைகளினது அமைச்சர்களும் உறுப்பினர்களும் முக்கிய உத்தியோகத்தர்களும் சமர்ப்பித்த பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள் மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன என்றும், அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்த அறிக்கை வழங்கப்பட்டதோடு, இது பற்றிய சாதகமான எதிர்பார்ப்புக்களுடன் இருந்தோம் என்றும், இவற்றுள் ஒரு சில யோசனைகள் மாத்திரம் மிகச் சிறு அளவில் நிறைவேறினாலும் முக்கியமான யோசனைகள் மீது எதுவிதமான பிரதிபலிப்பும் காட்டப்படவில்லை என்றும், இது மிகவும் கவலைக்கிடமான நிலைமையாகும் என்றும் குறிப்பிடுகிறார்.

மாகாண சபைகளுக்கு தற்போது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அடிப்படையின் கீழ் தோன்றியுள்ள பிரச்சினைகள் யாவை என்பதை அடையாளம் காண்பதே இங்கு முக்கியமாகும். அதிகாரப் பகிர்வு பற்றிய ஓர் இணக்கப்பாடு மத்திய அரசிற்கு இருக்குமேயாயின் இத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்படமாட்டாது. பதவியிலிருந்த அநேகமான அரசுகள் மாகாண சபைகளை இயல்பாகவே மரணிக்கச் செய்யும் வகையிலேயே செயற்பட்டுள்ளன. மாகாண சபைகள் தொடர்பாக திறந்த மனதுடன் நோக்க வேண்டும். இந்தியா அல்லது அமெரிக்கா அல்லது மற்றுமொரு நாடு கோருகின்ற காரணத்தினால் இப்பிரச்சினையை அணுகாமல் எமது நாட்டில் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரு வழிமுறையை அனைத்து அரசியல் கட்சிகளும் கையாள வேண்டும். அரசியலமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்தை அங்கீகரிப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்தது போல எதிர்காலத்தில் தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்றம் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பாரிய பொறுப்பை ஏற்க வேண்டும். மிக சிறு எண்ணிக்கையினரான இனவாதிகளின் குரலுக்கு அடிபணியாமல் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதியாக செயற்பட வேண்டும். இங்கு ஒருங்கியல் நிரலே பாரிய தடையாக உள்ளது. மாகாண சபை விடயங்களுக்கும் மத்திய அரசின் விடயங்களும் ஒருங்கியல் நிரலில் உள்ளடக்கப்பட்டிருப்பதால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. அரசியலமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்தின் மூலம் சில நிறைவேற்று அதிகாரங்கள் கைவிடப்பட்ட ஒரே காரணத்தினால் இப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்க மாட்டாது. மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கும் இன்றிருப்பதை விட கூடிய அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அதேசமயம், அவை சுயாதீனமாக இயங்குவதற்கும் வழி வகை செய்தல் வேண்டும். அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட வேண்டும்.

வட கிழக்கு மக்களின் அபிவிருத்தி, கலாசாரம் மற்றும் அரசியல் தேவைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை மிக உயர் மட்டத்தில் பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டே செயற்பட வேண்டும். அதற்கு அவசியமான நியதிச் சட்டங்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் தயாரிக்க வேண்டும். வடமாகாண சபைக்கான பொலிஸ் அதிகாரங்கள் உட்பட ஏனைய அதிகாரங்களைக் கோருவதோடு மாத்திரம் நிற்காமல், ஏற்கனவே உள்ள அதிகாரங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றி அவர்களுக்கு வேலைத்திட்டம் இருக்க வேண்டும். எனவே, ஏற்கனவே உள்ள அதிகாரங்களை விட கூடிய அதிகாரங்களின் தேவையை நிரூபிக்க அவர்கள் தவறிவிட்டார்கள். இருக்கக்கூடிய அதிகாரங்களை மிக உயர்ந்த மட்டத்தில் அவர்கள் பயன்படுத்த வேண்டும். அத்தோடு, இல்லாத அதிகாரங்களைப் பெறுவதற்கு அவர்கள் முயற்சிக்கலாம். அதிகாரத்தைப் பகிர்தல் என்பது தேசிய இனப்பிரச்சினை காரணமாக மேற்கொள்ளப்படும் ஒரு விடயம் அல்ல. வறுமையை இல்லாதொழிப்பது உரிய முறையில் வளங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் மிகச் சிறந்த முறை அதிகாரப் பகிர்வாகும். இதை நடைமுறையூடாகவே மேற்கொள்ள முடியும். ஆனால், இத்தகைய அணுகுமுறையை வட மாகாண சபை கையாளவில்லை. அதே சமயம் மத்திய அரசு மென்மேலும் அதிகாரங்களை தன்னகத்தே குவித்துக்கொண்டிருக்கின்றது.

வட மாகாணத்தைத் தவிர ஏனைய மாகாணங்களில் பிரதேச அரசியற் கட்சிகள் மாத்திரம் அதிகாரத்தைத் தம்வசப்படுத்தவில்லை. ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போன்ற தேசிய அரசியற் கட்சிகள் இந்த மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, மேற்படி மாகாண சபைகளின் அதிகாரம் தேசிய அரசியற் கட்சிகளிடமே குவிந்துள்ளன. தேசிய அரசியற் கட்சிகள் மாகாணத்தின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதில்லை. மேற்படி கட்சிகள் தேசிய அரசியல் தேவைகளை நோக்கமாகக் கொண்டே செயற்படுகின்றன. தமது கட்சிகளின் உள்ளக ஜனநாயகம் இன்மை இவ்விடயத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இது ஒரு வகையில் பாரதூரமான நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது. மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மாகாண மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை.

அதேசமயம், மத்திய அரச சேவைக்கு முதன்மை அளிக்கப்படுகிறதே ஒழிய மாகாண அரச சேவைக்கு வழங்கப்படும் இரண்டாம் மட்டக் கவனிப்பு மேலும் ஒரு நெருக்கடியான நிலையை ஏற்படுத்தி உள்ளது.

இத்தகைய ஒரு நிலைமை காரணமாக மாகாண சபைகள் தோல்வி கண்டுள்ளன. சுதந்திரத்தின் பின்னர் தீர்வுகாண இப்பிரச்சினைகளுக்கு நடைமுறையிலுள்ள நாடாளுமன்றம் அல்லது எதிர்காலத்தில் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்றத்தின் மூலமோ சரியான தீர்வினைப் பெற்றுக்கொள்ள முற்படவேண்டும். இத்தீர்வு மேற்கத்தேய தேவைகள் அல்லது கிழக்கின் தேவைகள் அல்லது இந்திய தேவைகள் என்றல்லாது உண்மையான இலங்கையின் தேவைகளின் அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படல் வேண்டும். அதேபோல் அனைத்து பிரிவினரும் விளங்கிக்கொள்ள வேண்டிய ஒரு விடயமானது, "முழுப் பங்கும் வேண்டும்" எனக் கோராமல் நடுநிலையாக இதனைத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.


விசேடமாக, வடமாகாண சபையின் இனவாத உறுப்பினர்களின் நடத்தைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் தேசிய ஒற்றுமைக்கு தடையாக இருக்கும் வகையிலான கருத்துக்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முன்வைக்கின்றனர். வடக்கு, தெற்கு என்ற கலந்துரையாடலுக்கு போகாமல் பழிவாங்கும் வகையில் நடந்துகொள்கின்றனர். இந்நிலைமையில் இருந்து மீள வேண்டும். தெற்கில் உள்ளவர்கள் வடக்கில் உள்ளவர்களுக்கு முக்கியமானதொரு பிரச்சினை இருப்பதைச் சிந்திக்க வேண்டும். அதேபோல், வடக்கில் உள்ளவர்களும் சிந்திக்க வேண்டும். தெற்குடன் எவ்வாறு ஒன்றிணைந்து வேலைகளைச் செய்துகொள்வது என அத்தகையதொரு அரசியல் நடுநிலையான மனநிலையை அனைவரும் வளர்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. அதேபோல் தேசிய அரசியல் கட்சிகளும் இதனை மேலும் அவர்களது வாக்குகளைப் பெறுவதற்கான அடிப்படையாகக் கொள்ளாமல் முப்பது வருட கால யுத்தத்தின் பின்னர் இதற்கு உரிய தீர்வினை காண்பது எவ்வாறு என்ற அடிப்படையில் செயற்படுவது முக்கியமாகும். வடக்கிலும் கிழக்கிலும் சிறுபான்மை அதிகாரப் பகிர்வு முறைக்கு எதிராக செயற்படுகின்றனர். அவர்களுக்கு ஜனநாயக ரீதியில் மறுப்பதற்கு உரிமையுள்ளதுடன் இதற்கு பொதுவாக நியாயமான தீர்வினைப் பெற்றுக்கொள்ளும் கடுமையான தேவை காணப்படுகின்றது. அதேநேரம் அதிகாரப் பகிர்வின் மூலம் தனி நாடாகப்பிரிந்து செல்லும் என்ற பொய்யான பயத்திலிருந்து நீங்க வேண்டும்.

### எமது பொறுப்பு

அதிகாரப் பகிர்வின் வெற்றியை இந்தியா மற்றும் வேறு நாடுகள் உறுதிப்படுத்தியுள்ளதுடன் இங்கு நியாயமாகவும் நேர்மையாகவும் செயற்படுவது மத்திய அரசினது பொறுப்பாகும். அதிகாரப்பகிர்வானது தேசியத் தேவையாகும் என நாம் இறுதி ஆலோசனையாக முன்வைக்கிறோம். இது சமஷ்டி அல்லது வேறு எந்தப் பெயரினால் அழைக்கப்பட்டாலும் இது மக்களது வாழ்க்கைக்கு சாதகமான முறையில் தாக்கம் செலுத்துவதாக அமைய வேண்டும் என்பதாகும். சொற்களை அடிப்படையாகக் கொண்டு விவாதிப்பதை விட ஒரு நாடு என்ற வகையில், ஒரு இனமாக முன்னோக்கிப் பயணிக்க வேண்டுமாயின் இத்தகைய கடினமான யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும். இல்லையேல் நாம் உலகத்தின் முன்னிலையில் தனிமைப்படுத்தப்பட்டு இது தொடர்ச்சியாக தீர்வு காணப்படாத பிரச்சினையாக அமைந்துவிடும். ஆதலால் சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து பிரஜைகள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு உள்ள பொறுப்பானது, இதனை யாரோ கூறுகின்றார்கள் என்று கருதாமல் தேசிய பொறுப்பாக கருதி உரிய தீர்வினைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தலாகும். இவ்வாறு சிரேஷ்ட ஆய்வாளர், லயனல் குருகே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குறிப்பிடுகிறார். (முற்றும்)

# பிணைமுறி மோசடி விவகாரத்தில் ரணிலையே முதலில் கைது செய்ய வேண்டும்

## மகிந்த அணி வலியுறுத்து




(கண்டி)

**இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரத்தில் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை விடவும் முன்னாள் பிரதமரான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையே முதலில் கைது செய்ய வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.**

லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கண்டிக்கு நேற்று விஜயம் மேற்கொண்டார்.

ஸ்ரீதலதா மாளிகைக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்ட அவர், அதன் பின்னர் கண்டியிலுள்ள ஸ்ரீமகா கதிர்காம ஆலயத்திற்கும் சென்று வழிபட்டார்.

இந்த வழிபாடுகளை முடித்துக்கொண்டு அங்கிருந்து திரும்பிய அவர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரவி கருணாநாயக்கவுக்கு முன்பாக கைது செய்யப்பட வேண்டிய முக்கிய புள்ளிகள் வெளியே இருக்கின்றார்கள். நல்லாட்சியில் நிதியமைச்சானது ரவி கருணாநாயக்கவுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் மத்திய வங்கி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கீழே வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டிருந்தது.

எனவே ரவி கருணாநாயக்கவுக்கு நிதியமைச்சின் பணிகளே இருந்தன. எனவே முக்கிய புள்ளிகள் வெளியே இருக்கின்றனர். ரவி கருணாநாயக்கவுக்கு சட்டரீதியாக இதனை அணுக முடியும்.

அதற்கான உரிமை அவருக்கு உண்டு. தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆவணங்களைப் பெற்று அவரை. இவரை கைது செய்யும்படி கோரப்போவதில்லை. ஏன் இவரை கைது செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என பலருக்கும் கேள்விகள் எழலாம்.

இருப்பினும்· நீதித்துறையில் அரசியல் தலையீடுகளை செய்ய மாட்டோம் என்று கூறியே இந்த நாட்டைப் பொறுப்பேற்றோம். அதன் மீது நம்பிக்கை வைத்தே மக்களும் ஆணையை வழங்கினர். தற்போது அப்பணிகள் பொலிஸாரிடமும் சட்டமா அதிபரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

முன்னர்போல அலரிமாளிகையில் ஒன்றுகூடி இன்று இரவு, நாளை என ஒவ்வொருவரை கைது செய்வதற்கு திட்டமிடப்படும் செயற்பாடு இன்று இடம்பெறுவதில்லை. இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக மத்திய வங்கியானது நிதியமைச்சிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு பிரதமருக்கு கீழே கொண்டுவரப்பட்டது.

அதன் உள்நோக்கமாக இந்தக் கொள்ளை இடம்பெற்றது. இந்த மார்க்கத்தை யார் அமைத்துக்கொடுத்தது என்பதைத் தேடி அவரைக் கைது செய்ய வேண்டும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மொட்டுக்கட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்று நாடாளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்றுவது நிச்சம்.

'எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்தின் நல்ல திட்டங்களுக்கு இருகரங்களையும் உயர்த்தி ஆதரவளிப்பதாக மேடைகளில் கூறியிருந்தார். ஏற்கனவே அரசாங்கத்தால் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக கடந்த நாடாளுமன்ற அமர்வில் நாங்கள் யோசனை ஒன்றை சமர்ப்பித்தபோது அதற்கு ஆதரவளிப்பதில் இருந்து சஜித் அணியினர் உட்பட ஐக்கிய தேசியக் கட்சி விலகிக் கொண்டதால் பணம் கொடுக்க முடியாதபடி அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்பட்டது.

எனவே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தெளிவான முடிவை எடுத்ததுபோல இம்முறை நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்கள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்றதுபோல நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும்.

இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அடுத்தவாரம் வேட்புமனுத் தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில் இதுவரை சின்னத்தை அவர்கள் தெரிவு செய்யவில்லை. எனவே கொஞ்சம் கொஞ்சமாக ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மாற்றுத் தெரிவுகளை நாடி வருவதால் இப்போது இருக்கின்ற ஒரேயொரு மாற்றுத் தெரிவானது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாத்திரமே. பொதுத் தேர்தலில் எமது கட்சி வெற்றி பெறுவது நிச்சயமே என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## ஒன்பது ஆண்டுகள் ஊதியம் வழங்காது

## இலங்கைப் பெண்ணை அடிமையாக வைத்திருந்த அமெரிக்கப் பெண்ணுக்கு ஆறு ஆண்டுகள் சிறை!

(வோஷிங்டன்)

ஒன்பது வருடங்கள் ஊதியம் இல்லாமல் இலங்கையைச் சேர்ந்த பெண்ணை தனது வீட்டில் பணியாளராக வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக நியூஜெர்சி பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு சுமார் ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அமெரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

44 வயது ஆலியா இமாத் ஃபலேஹ் அல்-ஹுனிட்டி என்ற பெண்ணுக்கே இவ்வாறு தண்டனையை நேற்று முன்தினம் கேம்டனில் உள்ள பெடரல் நீதிமன்றம் விதித்தது.

2009 ஆம் ஆண்டில் இலங்கையைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் தற்காலிக விசாவில் ஜோர்தானிலிருந்து தனது வீட்டுப் பணியாளர் தொழிலுக்காக அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றார்.

இலங்கைப் பெண்ணின் விசாக் காலம் நிறைவடைந்த பின்னரும் அவரை சட்டவிரோதமாக தனது வீட்டில் ஒன்பது ஆண்டுகள் தடுத்து வைத்ததுடன், அவருக்கு ஊழியம் கொடுக்கவும் மறுத்து வந்தார்.

இந்நிலையிலேயே அவருக்கு எதிராக அடிமைப்படுத்தல், நிதி ஆதாயத்திற்காக சட்டவிரோத அந்நிய அடைக்கலம், திருமண மோசடி உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்காக வழக்குத் தொடரப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

வுட்லேண்ட் பார்க் மற்றும் செகாக்கஸில் உள்ள தனது வீடுகளில் சமையல் வேலைகளில் ஈடுபடவும் சுத்தம் செய்யவும் தனது மூன்று குழந்தைகளை பராமரிக்கவும் பாதிக்கப்பட்ட பெண்ணை ஹுனிட்டி ஊதியம் வழங்காமல் கட்டாயப்படுத்தியதாகவும் நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

---

## சிறையிலிருந்து தேர்தலுக்கு தயாராகிறார் பிள்ளையான்

(ஏறாவூர்)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையான் இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தயாராகி வருகிறார்.

அவர் தலைமைத்துவம் வழங்கும் கட்சியின் ஊடாக பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தெரியவருகிறது.

அவரது கட்சி இம்முறை பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரமே போட்டியிடவுள்ளதாகவும் படகு சின்னத்தில் போட்டியிடவுள்ளதாகவும் தேர்தல் செயலகம் தெரிவித்தது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் பிள்ளையான் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில், அந்தக் குற்றச்சாட்டின் கீழ் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். விளக்கமறியலிலுள்ள அவர் போட்டியிடுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதா? என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதாக அவரது கட்சியின் செயலாளர் பிரசாந்தன் தெரிவித்தார். அவர் தேர்தலில் போட்டியிடு வதற்குத் தடை இல்லை என்றால் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவார் என பிரசாந்தன் தெரிவித்தார். (இ-7)

---

## ராஜித சேனாரட்னவுக்கு பிணை வழங்கியதற்கு எதிராக வழக்கு

(கொழும்பு)



சர்ச்சைக்குரிய வெள்ளை வான் ஊடக சந்திப்பு தொடர்பாக முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கு கொழும்பு பிரதான நீதவான் பிணை வழங்கியுள்ளதை சவாலுக்குட்படுத்தி, சட்டமா அதிபர் தாக்கல் செய்த மீளாய்வு விண்ணப்பத்திற்கான உத்தரவை கொழும்பு மேல் நீதிமன்றம் எதிர்வரும் 16 ஆம் திகதி வழங்கும்.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் மஞ்சுள திலகரட்ன முன்னிலையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டது.

சட்டமா அதிபரின் சார்பாக ஆஜரான பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ் தெரிவிக்கையில், சந்தேக நபரை பிரதான நீதவான் பிணையில் அனுப்பிய போது சந்தேக நபரிடம் இருந்து பொலிஸார் எந்தவொரு வாக்குமூலத்தையும் பெற்றிருக்கவில்லை என்றும் பிணையில் அனுப்ப முன்னர் சந்தேக நபரின் உடல் நிலை தொடர்பான மருத்துவச் சான்றிதழ் கேட்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இதனால், சந்தேக நபருக்கு வழங்கப்பட்ட பிணை உத்தரவு மீளப்பெறப்பட்டு சந்தேகநபர் உடனடியாக மீண்டும் தடுப்புக் காவலில் வைக்கப்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சந்தேக நபரான ராஜித சேனாரட்னவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அனில் சில்வா தெரிவிக்கையில், ராஜித சேனாரட்னவுக்கு வழங்கப்பட்ட பிணை சட்ட ரீதியானது என்றும் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பிணை வழங்கக் கூடியவை என்றும் வாதிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பகிடிவதை; மாணவன் மீது பெரிய ரயர் உருட்டப்பட்டது உறுதி-பொலிஸ் விசாரணை தீவிரம்

(கொழும்பு)

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவன் பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த 'இரவு விருந்தில்' இடம்பெற்ற பகிடிவதையில் பலத்த காயமடைந்து உயிராபத்தான நிலையிலுள்ள சம்பவம் குறித்து விசாரிக்க மேற்கு மாகாண சிரேஷ்ட டி.ஐ.ஜி. தேசபந்து தென்னக்கோன் உத்தரவிட்டார்.

இது குறித்து பொலிஸ் விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

பசிந்து ஹிருஷன் வயது-20 என்ற மாணவனே பாதிக்கப்பட்டார். அவரை வெளிநாட்டு சிகிச்சைக்கு அனுப்ப நிதியுதவி வழங்க பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்தது. "உலகில் எந்த நாட்டுக்கேனும் அனுப்பி அவரைக் குணமடைய வைக்க முடியுமெனில், அதற்குப் பல்கலைக்கழக நிதியிலிருந்து பணத்தையும் கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம்" என்று பேராசிரியர் லியானேஜ் கூறினார்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் அடையாளம் காணப்பட்டவுடன் அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சில சிரேஷ்ட மாணவர்க ளால் உருட்டி விடப்பட்ட ரயர் மோதியதில் ஹிருஷனுக்கு மூளை அதிர்ச்சி ஏற்பட்டது. இச் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகிலுள்ள நான்கு ரயர்கள் (ஒரு ரிரக் ரயர், பஸ் ரயர் மற்றும் இரண்டு கார் ரயர்கள் இருந்ததால் பயன்படுத்தப்பட்ட ரயரை அடையாளம் காண அரசு ஆய்வாளர் மற்றும் நீதித்துறை வைத்திய அதிகாரி அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதாக துணைவேந்தர் தெரிவித்தார்.

முதற்கட்ட விசாரணைகளை மேற்கொள்ள 10 உயர் பொலிஸ் அதிகாரிகள் நேற்று முன்தினம் பல்கலைக்கழகத்திற்கு வந்ததாக அவர் கூறினார்.

"இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மூன்று முறை பொலிஸார் பல்கலைக்கழகத் திற்கு வந்தனர், சந்தேக நபர்களைக் கண்டு பிடிப்பதற்கு எங்கள் முழு ஒத்துழைப்பையும் அவர்களுக்கு வழங்கியுள்ளோம். இதே வேளை மூன்று மாணவர்கள் குறித்து எங்களுக்குச் சந்தேகம் உள்ளது. ஆனால் அவர்கள் தொடர்புபட்டமையை இன்னும் உறுதிப்படுத்த முடியவில்லை என்று அவர் தெரிவித்தார்.

"குற்றவாளிகளாகக் கருதப்படுபவர்கள் வேண்டுமென்றே இதைச் செய்திருந்தால் அவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள். சுமார் 10-15 ஆண்டுகளாக இரவு விருந் துகள் நடந்து வருகின்றன. இரவு விருந்துகளில் கடுமையான விதிகளை அறிமுகப்படுத்த இப்போது ஒரு முடிவை எடுத்துள்ளோம். சில மாணவர்கள் மது அருந்தியதாக தெரியவருகிறது. அன்றைய நிகழ்வு முடிந்தபின், சுமார் 100-150 மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் தங்கியிருந்து இரவு வரை கேளிக்கையைத் தொடர்ந்தனர். இந்தச் சம்பவம் மார்ச் 6 ஆம் திததி அதிகாலை 1.15-1.30 மணியளவில் நிகழ்ந்தது" என்றும் அவர் கூறினார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, இந்தச் சம்பவம் குறித்து முழுமையான மற்றும் சுயாதீனமான விசாரணையை வலியுறுத்தி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பதில் பொலிஸ்மா அதிபரை வலியுறுத்தினர்.

"விசாரணைகளின் முடிவுகளுக்காக நாங்கள் காத்திருக்கின்றோம். பல பாதுகாப்புக் காவலர்களும் இருந்தனர். எனவே மாணவர்களின் பெயர்களைக் கண்டு பிடிப்பது மிகவும் கடினம் அல்ல. இந்த குற்றத்தைச் செய்த மாணவர்கள் தண்டிக்கப்படுவார்கள், அவர்கள் மீண்டும் பல்கலைக் கழகத்திற்கு வரமுடியாது" என்றார்.

இந்தச்சம்பவத்தைத்தொடர்ந்து காயமடைந்த மாணவர் களுபோவில வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை துணை இயக்குநர் டாக்டர் குமார விக்கிரமசிங்க, நேற்று முன்தினம் குறித்த மாணவரின் இதயத்துடிப்பை நீடிக்க பொருத்தப்பட்டிருந்த இயந்திரங்கள் நீக்கப்பட்டதாகவும், அவருக்குச் செயற்கைச் சுவாசம் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார். மாணவன் இன்னும் ஆபத்தான நிலையில் இருப்பதாக அவர் கூறினார். ஆனால் இலேசான கண் அசைவுகள் தென்படுவதாகவும் தெரிவித்தார்.

இதற்கிடையில், உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சென்று காயமடைந்த மாணவனின் நிலை குறித்து ஆய்வு செய்தார்.

இந்த விஜயத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த அமைச்சர், பல்கலைக் கழகங்களில் பகிடிவதையை நிறுத்த மதத் தலைவர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் முழு ஆதரவையும் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலை மையிலான அரசாங்கம் ஒரு வலுவான பகிடிவதை எதிர்ப்பு கொள்கையைப் பின்பற்றியுள்ளது என்றும், பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை அகற்ற உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், பல்கலைக் கழகங்களின் உள்விவகாரங்களில் அரசாங்கம் தலையிடத் தயாராக இல்லை என்று சுட்டிக் காட்டிய அவர், இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகளால் இரண்டு தனித்தனி விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதன் அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர், மாணவனின் உயிரைக் காப்பாற்ற அயராது முயன்றமைக்காக வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

மினு வாங் கொடையைச் சேர்ந்த பசிந்து ஹிருஷன், 2018 ஆம் ஆண்டில் க.பொ.த உயர் தரப் பரீட்சையில் தோற்றி, மூன்று 'ஏ'களுடன் தேர்ச்சி பெற்று மூன்று மாதங்களுக்கு முன்பு பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2000

### குகன்




### திவ்யா




### மனோஜ்





### கபிலன்




### பவிதன்




### சபிதா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மட்டக்களப்பில் கொரோனா வைரஸ்

# தொற்று தடுப்பு நிலைய விவகாரம்

# ஏறாவூர் நகர சபை கடும் எதிர்ப்பு

**(ஏறாவூர்)**

**மக்கள் அபிப்பிராயம் பெறப்படாமல் மட்டக்களப்பில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நிலையம் உருவாக்கப்பட்டு அங்கு வெளிநாடுகளிலிருந்து வரும் நூற்றுக்கணக்கானோர் தங்க வைக்கப்பட்டுள்ளமைக்கு தமது கடும் எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளியிடுவதாக ஏறாவூர் நகர சபைத் தவிசாளர் தெரிவித்தார்.**



மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நிலையத்தில் வெளிநாட்டிலிருந்து வருவோர் தங்கவைக்கப்பட்ட நிலைமையின் பின்னர் மட்டக்களப்பு பிரதேசத்தில் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்ச நிலை குறித்து ஆராயும் விசேட கூட்டம் ஏறாவூர் நகரசபை மண்டபத்தில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது.

ஏறாவூர் நகர சபைத் தவிசாளர் இறம்ழான் அப்துல் வாஸித் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில் பிரதேச வைத்தியர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், நகர சபை உறுப்பினர்கள் நகர சபை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தொடர்ந்து தனது கருத்தை வெளியிட்ட நகர சபைத் தலைவர், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் முஸ்லிம் மக்கள் தொடர்ந்து 30 வருடங்களாக இடம்பெற்ற ஆயுத முரண்பாடுகளாலும், சுனாமி, சூறாவளி, பெருவெள்ளம் வரட்சி போன்ற இயற்கை இடர்களாலும் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வந்துள்ளவர்கள்.

தற்போதுதான் அவர்கள் இத்தகைய இயற்கை, செயற்கை மனித அழிவுகளிலிருந்து படிப்படியாக மீண்டு வரும் வேளையில் உலகை அச்சுறுத்தும் கொரோனா உயிர்க்கொல்லி வைரஸ்"க்கு அந்த மக்களைப் பலிக்கடாவாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் குணமடைய வேண்டும், அவர்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட வேண்டும் என்பதற்காக அரசாங்கம் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் நாம் மனிதாபிமான ஆதரவை முழுமையாக வழங்கத் தயாராக உள்ளோம்.

ஆனால் கொரோனாவுடன் எந்தவிதத்திலும் தொடர்பில்லாத அப்பாவி மக்களிடத்தில் கொரோனாவைக் கொண்டு வந்து வலிந்து திணிப்பதை எம்மால் அனுமதிக்க முடியாது.

கொரோனாவால் பாதிக் கப்பட்டவர்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து சிகிச்சையளிக்கப் படவிருப்பதையும் நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்.

அத்தகைய தீர்மானத்தை எந்தத் தரப்பு எந்த முனைப்போடு எடுத்திருந்தாலும் அதனை ஏறாவூர் நகர சபையினராகிய நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு இந்தத் தீர்மானத்திற்கெதிராக எமது முழுமையான எதிர்ப்பையும் வெளிக்காட்டுகின்றோம்.

மேலும், எமது பிரதேச வைத்தியசாலைகளில் போதிய வைத்திய வசதிகள், ஆளணிகள் மிகவும் பற்றாக்குறையாக இருக்கின்ற இந்தத் தருணத்தில் மேலும் மேலும் எமது மக்களைப் பாதிப்படையச் செய்யும் எந்த முயற்சியையும் ஏறாவூர் நகர சபை இன மத பேதமற்று கண்டிக்கிறது" எனத் தெரிவித்தார்.

நகர சபையின் இந்தத் தீர்மானத்தை உடனடியாக ஜனாதிபதிக்கும் சுகாதார அமைச்சுக்கும் அனுப்பி வைக்குமாறு நகர சபைத் தவிசாளர் அப்துல் வாஸித் நகர சபைச் செயலாளர் எம்.ஆர். ஷியாஹுல் ஹகைப் பணித்தார். (இ-7)

# தனிச் சிங்கள வாக்குகளைப் பெறும் பிரசாரத்துக்கு முயற்சிக்கும் அரசாங்கம்

## சாடுகிறார் அசாத் சாலி



(கொழும்பு)

சிறுபான்மை இனத்தவர்கள் எவரையும் வேட்புமனுவில் இணைத்துக்கொள்ளாமல், அரசாங்கம் தனிச் சிங்கள வாக்குகளை மாத்திரம் பெற்றுக் கொள்ளும் பிரசாரத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டு வருகின்றது என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி குற்றம் சாட்டினார்.

தேசிய ஐக்கிய முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் தேர்தலில் பொது ஜன பெரமுனவின் வேட்பு மனுவில் தமிழ், முஸ்லிம் வேட்பாளர்கள் எவரையும் நியமிக்காமல் இருக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அவர்கள் தேர்தலில் தனித்து போட்டியிட்டு, வெற்றிபெற்றதன் பின்னர் அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ள இருக்கின்றது.

அரசாங்கத்தின் இந்தத் திட்டமானது, தேர்தல் பிரசாரத்தில் சிங்கள மக்கள் மத்தியில் இனவாத அடிப்படையில் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையாகும்.

பொதுத் தேர்தலில் எப்படியாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

இந்நிலையில் அரசாங்கத்தின் சார்பில் தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களை நியமிக்காமல், சிங்கள மக்கள் மத்தியில் இதனை பிரசாரம் செய்து, தனிச் சிங்கள வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவும் தேர்தலுக்குப் பின்னர் இதனைக் காரணம் காட்டி சிறுபான்மை மக்களை அடக்குவதற்குமே அரசாங்கம் முயற்சித்து வருகின்றது.

அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போதும் சிறுபான்மை மக்களை கண்டுகொள்ளாத வகையிலே இருக்கின்றன.

குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கிறதா? எனப் பரீட்சித்து பார்க்க தெற்கில் அரசாங்க கட்டடங்களை ஒதுக்கும்போது அதற்கு சிங்கள மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள் என்பதற்காக, சிறுபான்மை மக்கள் வாழும் மட்டக்களப்பில் தனியார் பல்கலைக் கழகத்தை வலுக்கட்டாயமாக கைப்பற்றி, பயன்படுத்தி வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## 5 மாணவர்கள் கௌரவிப்பு



(கரணவாய்)

கடந்த வருடம் இடம் பெற்ற தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இமையாணன் கிராமத்தைச் சேர்ந்த ஐந்து மாணவர்கள் இமையாணன் கிராம அபிவிருத்திக் குழுவினரால் நேற்று முன்தினம் கௌரவிக்கப்பட்டனர். (இ-60)

## அனைத்துலக பெண்கள் தின நிகழ்வு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை மாவட்ட மகளிர் குழு நடத்தும் அனைத்துலக பெண்கள் தின நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மாவட்ட மகளிர் குழுத்தலைவி திருமதி ஜெயமணி யோசெவ் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கூ.அ.உ. ஆணையாளர் திருமதி சி.சண்முகலிங்கம் கலந்து கொள்வார். (இ-5)

## யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் எல்.ஈ.டி.விளக்குகள் பொருத்தும் பணி

(குப்பிழான்)



2019 ஆம் ஆண்டுக்கான சபை நிதியிலிருந்து வட்டாரங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட புதிய எல்.ஈ.டி. வீதி விளக்குகளைப் பொருத்தும் செயற்பாடுகளை யாழ். மாநகரசபை ஆரம்பித்தது.


வட்டாரங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட குறித்த புதிய எல்.ஈ.டி. வீதிவிளக்குகள் வட்டார உறுப்பினர்களின் ஆலோசனைக்கமையவும் மக்களின் கோரிக்கைக்கமையவும் முக்கிய வீதிகள், சந்திகளில் சபையின் மின்பகுதி ஊழியர்களால் பொருத்தப்பட்டு வருகின்றன. (இ-18)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 | 150 |
| தக்காளி | 120 | 110 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 |
| கோவா | 100 | 130 | 100 | 120 |
| கரட் | 140 | 200 | 180 | 240 |
| பூசணி | 80 | 80 | 80 | 60 |
| புடோல் | 100 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 60 | 70 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 160 | 240 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 170 | 160 | 180 |
| பாகற்காய் | 180 | 120 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 40 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 80 | 100 |
| பயற்றங்காய் | 120 | 50 | 100 | 60 |
| லீக்ஸ் | 100 | 180 | 200 | 200 |
| பீற்றூட் | 50 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 140 | 100 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 400 | 400 |
| போஞ்சி | 140 | 100 | 150 | 140 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | – | 60 |
| கீரை - 1பிடி | 20 | 50 | 50 | 30 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 65 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 130 | 180 | 150 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 140 | 160 |
| முள்ளங்கி | 20 | 40 | – | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | – | – | – | 100 |




# சிங்கமும் சிறு எலியும்



ஒரு நாள் மதிய வேளையில் சிங்கம் ஒன்று காட்டில் தூங்கிக் கொண்டு இருந்தது.

அங்கு வந்த எலி சிங்கத்தின் மீது குதித்து விளையாடியது.

இதனால் சிங்கம் விழித்தெழுந்தது. கோபம் கொண்ட சிங்கம் எலியைப் பிடித்து, "நீ எனக்கு இன்று நல்ல மதிய உணவாகப் போகிறாய்" என்று கர்ஜித்தது.

ஆனால் எலியோ! சிங்கத்திடம், "என்னை மன்னித்து விடுங்கள். நான் தெரியாமல் உங்கள் மீது ஏறிவிட்டேன். என்னை சாப்பிடாதீர்கள்". எனக் கெஞ்சிக் கேட்டது.

சிங்கத்திடம் "இன்று நீங்கள் என்னைக் கொல்லாமல் விட்டால் என்றாவது ஒரு நாள் உங்களுக்கு என் நன்றியைத் திருப்பிச் செலுத்துவேன்" என்றது. சிங்கமோ, "இவ்வளவு சிறிய உடம்பை வைத்துக்கொண்டு எனக்கு நீ உதவப் போகிறாயா?" என்று எலியை ஏளனம் செய்தது. இருந்தாலும் எலியைக் கொல்லாமல் போக விட்டது. சில நாட்களின் பின் சிறிய இறைச்சித் துண்டிற்கு ஆசைப்பட்ட அந்தச் சிங்கம் வேடர்கள் வைத்திருந்த வலையில் சிக்கிக்கொண்டது.

வலையில் அகப்பட்ட சிங்கம் பலமாகக் கர்ஜித்து அழுதது.

அந்தச் சிறிய எலி சிங்கத்தின் சத்தத்தைக் கேட்டு அந்த இடத்திற்கு வந்து வலையைத் தன் பல்லினால் வெட்டி சிங்கத்தைத் தப்பிப் போக உதவியது.


சிங்கம் இந்தச் சின்ன எலி என்னைக் காப்பாற்றி விட்டதே என்று வெட்கப்பட்டு எலிக்கு தன்னைக் காப்பாற்றியதற்கு நன்றி சொல்லிச் சென்றது.

நீதி: உருவத்தைப் பார்த்து யாரையும் ஏளனம்செய்யக்கூடாது.

உடலில் பெரியவராக இருப்பதால் தான் மேலானவர் என்று ஆணவம் கொள்ளக் கூடாது. சிறிய பலமற்ற ஒருவர், தன்னிலும் பெரிய பலமான ஒருவருக்கு உதவும் சந்தர்ப்பங்களும் வரும்.

சிறிய் துரும்பும் பல்குத்த உதவும் என்பது பழமொழி!

## எண்களை இணைத்து உருவைக் கண்டுபிடியுங்கள்



## பொன்மொழி

உண்மையான நட்பு ஆரோக்கியம் போன்றது. அதனை இழக்கும் வரை அதன் மதிப்பை நாம் உணர்வதில்லை.

-வோல்டன்-

## தமிழ் ஒத்தகருத்துச் சொற்கள்

- அகரு - அகில்
- அகலம் - விரிவு
- அகலல் - நீக்கல்
- அகல் - தகழி
- அகவை - வயது
- அகழ் - அகழி
- அகிலம் - உலகம்
- அக்கம் - துலாக்கோல்
- அக்கறை - சிரத்தை, கருத்து, விருப்பு, அவசியம்
- அக்கிரமம் - அநீதி
- அக்கினி - நெருப்பு
- அங்கதம் - மாா்பு, வசைப் பாட்டு
- அங்கத்துவம் - உறுப்புரிமை
- அங்கம் - கட்டில், உறுப்பு
- அங்கலாய்ப்பு - கலக்கம்
- அங்காடி - சந்தை
- அங்கி - சட்டை
- அங்குரம் - முளை
- அசதி - சோர்வு
- அசடு - குற்றம்
- அசட்டை - பாராமுகம்
- அசரீரி - உருவிலிவாக்கு, வானொலி
- அசலம் - மலை
- அசுவமேதம் - குதிரை, வேள்வி

## உலகப் பொது அடையாளங்கள்

உலகம் பூராகவும் சில பொதுக் குறியீடுகள் உள்ளன. எந்த மொழி பேசும் மக்களாக இருந்தாலும் இக்குறியீடுகள் தரும் பொருள் ஒன்றாகவே இருக்கும். மக்களாலும் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

- ஒலிவ் இலைகள் - சமாதானம்
- வெள்ளைப் புறா - அமைதி
- சிவப்புச் சக்கரம் - வளர்ச்சி
- மஞ்சள் கொடி - தொற்றுநோய்
- கறுப்புப் பட்டி - துக்கம்
- கண்கள் கட்டப்பட்டிருக்கையில் கையில் தராசு வைத்திருக்கும் பெண் - நீதி
- சிவப்பு முக்கோணம் - குடும்பக் கட்டுப்பாடு
- செஞ்சிலுவை - மருத்துவ உதவி
- அரைக் கம்பத்தில் கொடி - துக்கம்
- சிவப்பு விளக்கு கொடி - ஆபத்து
- கறுப்புக்கொடி - எதிர்ப்பு
- சிவப்புக்கொடி - அபாயம் / புரட்சி
- வெள்ளைக்கொடி - சோகம்
- கப்பல்களில் மஞ்சள் கொடி - தொற்றுநோய்
- சக்கரம் - தர்மம்
- வீதிகளில் சிவப்பு விளக்கு - நிறுத்து
- வீதிகளில் மஞ்சள் விளக்கு - தயாராகு
- வீதிகளில் பச்சை விளக்கு - போ
- எலும்பின் நடுவில் மண்டையோடு - ஆபத்து / மரணம்

## விடுகதைகளும் விடைகளும்

- பிறக்கும்போது வால் உண்டு. இறக்கும்போது வால் இல்லை.
  **தவளை**
- மண்ணுக்குள்ளே பொன்னம்மாள
  **மஞ்சள்**
- மொட்டைத் தட்டிலே எட்டுப்பேர் பயணம்.
  **படகு**
- குளத்து நிறைய இருக்கும் தண்ணீர் குருவி குடிக்க முடியாத தண்ணீர்.
  **இளநீர்**
- சிவப்பு மொச்சைக் கொட்டை. பகட்டுப் பட்டுச் சட்டை.
  **பட்டுப் பூச்சி**
- நாலு மூலைச் சதுரப் பெட்டி - அதன் மேலே ஓடுமாம் குதிரைக் குட்டி.
  **அம்மி, குழவி**
- பச்சைப் பெட்டியில் பத்துச் சரம் எடுத்துப் பார்க்கலாம் - ஆனால் தொடுத்துப் போட முடியாது.
  **வெண்டைக்காய்**
- கைக்குள் அடங்குவான் காரிருள் அகற்றுவான்.
  **டார்ச் விளக்கு**
- உதைத்தாலும் அடித்தாலும், ஒன்றாக இருக்கும்.
  **தண்ணீர்**
- செய்வதைச் செய்வான் சொன்னதைச் செய்யான்.
  **கண்ணாடி**
- கால் இல்லை ஓட்டம் உண்டு. மூச்சு இல்லை காற்று உண்டு.
  **ரப்பர் பந்து**
- ஆயிரம் குழந்தைகட்கு அரைஞாண் ஒன்று.
  **துடைப்பம் கட்டிய கயிறு**
- காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடுவாள் முக்காடு போட்டால் சொக்காயில் தொங்குவாள்.
  **பேனா**
- தன் மேனி முழுதும் கண்ணுடையாள் தன்னிடம் சிக்கியபேரைச் சீரழிப்பாள்.
  **வலை**
- வாயிலிருந்து நூல் எடுப்பான் மந்திரவாதியல்ல. கிளைக்குக் கிளை தாவுவான் குரங்கும் அல்ல. வலை விரித்துப் பதுங்கியிருப்பான், வேடனும் அல்ல.
  **சிலந்தி**
- ஒளி கொடுக்கும் விளக்கு அல்ல. சூடு கொடுக்கும் நெருப்பு அல்ல. பளபளக்கும் தங்கம் அல்ல.
  **சூரியன்**

அன்பு இருக்கும் இடம் சொர்க்கம் ;
அன்பு மறைந்த இடம் நரகம்!

– திருமூலர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ரணில் விக்கிரமசிங்க தங்களை ஏமாற்றிவிட்டாராம்

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தங்களை ஏமாற்றிவிட்டதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார்.

அவர் கூறியதை வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் வழிமொழிந்துள்ளார்.

இவ்வாறு கூறுவதற்கு உங்களால் எப்படி முடிகிறது என்றுதான் கேட்க வேண்டும்.

என்ன செய்வது தமிழர்களுக்குக் கிடைத்த அரசியல் தரப்பின் இயலுமை இதுதான் என்ற கட்டத்தில் தலைவிதியை நொந்து கொள்வதைவிட வேறுவழி ஏதுமில்லை.

பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை அந்தப் பதவியில் வைத்திருப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாகப் பாடுபட்டுள்ளது.

அப்போதெல்லாம் ரணில் விக்கிரமசிங்கவை நம்பாதீர்கள் என்று பலரும் எடுத்துரைத்தனர்.

இருந்தும் அதுபற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்மியும் கவனம் செலுத்தவில்லை.

மாறாக தங்களுக்குச் சார்பான அரச அதிபர்களை நியமிப்பது, வட மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை ரணில் விக்கிரமசிங்கவைக் கொண்டு ஓரங்கட்டுவது போன்ற காரியங்களைச் செய்து விட்டு, இப்போது ரணில் விக்கிரமசிங்க எங்களை ஏமாற்றிவிட்டார் என்று கூறுவது எத்தன்மையது என்பதை தமிழ் மக்கள் தான் சிந்திக்க வேண்டும்.

தவிர, ஒருமுறை வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு நியமனம் தேவை எனக் கூறி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரைச் சந்தித்தனர்.

அப்போது இரா.சம்பந்தர் கூறியது; நாங்கள் ஒரு பெரும் தீர்வை அடைவதற்கான பணியில் ஈடுபட்டுள்ளோம்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை தாருங்கள் என்று கேட்டால் எங்கள் இலக்குப் பிசகி விடும் என்று கூறியிருந்தார்.

ஈற்றில் என்ன நடந்தது என்பதைத்தான் இப்போது கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனும் வடக்கின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும் கூறியுள்ளனர்.

ஆக, தமிழர்களின் அரசியல் தலைமை என்பது தாம் ஏமாற்றப்படுகிறோம் என்பதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத அளவிலேயே இருந்துள்ளது என்பது இப்போது தெட்டத் தெளிவாகியுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஒருவர் தம்மை ஏமாற்றிவிட்டார் என்பதை உணர்ந்து கொள்வதற்குக்கூட நான்கு, ஐந்து ஆண்டுகள் நம் அரசியல் தலைமைக்குத் தேவையாக வுள்ளது.

இதுவே இலட்சணமாயின், தமிழர்களின் அரசியல் தலைமையின் ஆளுமை, இயலுமை எவ்வாறானது என்பதைப் புரிந்து கொள்வது அவ்வளவு கடினமன்று.

# பட்டதாரிகளுக்கான நியமனப் பெயர்ப்பட்டியல் வெளியீடு

(கொழும்பு)

தொழில் வாய்ப்பற்றபட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் தகுதி பெற்றவர்களின் பெயர்ப்பட்டியல் அரச நிர்வாக இணையத்தளத்தில் நேற்று (புதன்கிழமை) வெளியிடப்பட்டுள்ளது.

நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்று 3 நாட்களுக்குள் இவர்கள் தமது பிரதேச செயலாளர் பிரிவிற்கு சமுகமளிக்க வேண்டும் என நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் நியமனக்கடிதம் கிடைக்கப்பெறாதோர் இது தொடர்பாக எந்தவித சந்தேகத்தையும் ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல கடிதம் கிடைக்கப்பெற்ற 7 நாட்களுக்குள் பயிற்சிக்கு சமுகமளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் இது தற்பொழுது நடைமுறையில் இல்லை எனவும் கூறப்படுகிறது.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அமைய பொதுத்தேர்தல் நிறைவடைந்து 5 நாட்களுக்கு பின்னர் அதாவது, எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாவுள்ளது.

பட்டதாரிகள் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்திருந்தார்.

அதன்படியே பட்டதாரிகள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ம-3)

# 500 வாகனங்கள் மணல் சேவையில்

## பாரவூர்தி உரிமையாளர் சங்கம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் கட்டுமானப் பணிகளுக்கான மணல் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மணல்சேவையானது வடமராட்சி குடத்தனை பிரதேசத்தில் இருந்து பாரவூர்திச் சங்கத்தினராகிய எம்மால் திறம்படமேற்கொள்ளப்பட்டு கொண்டிருக்கும் இந்நிலையில் குடத்தனை பிரதேச மக்கள் தங்களது வாகனங்களுக்கும் மணல்சேவைவழங்கவேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் முதலில் ஆறு வாகனங்களுக்குரிய சேவையினை வழங்குமாறு கேட்ட தற்கிணங்கவும் அரச அதிபரின் கலந்துரையாடலுக்கு அமைவாகவும் எம்மால் அவர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்பட்டது.

தொடர்ந்து 9 வாகனங்களும் பின்னர் 13 வாகனங்களுக்கு குமாக தற்போது தங்களால் கொள்வனவு செய்யப்படும் புதிய வாகனங்கள் அனைத்திற்கும் மணல்சேவை வழங்குமாறு மருதங்கேணி பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் எம்மிடம் கோரியுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் எமது சங்கத்தில் பதிவில் ஏறக்குறைய 500 வாகனங்கள் சேவையில் ஈடுபடுகின்றன. எமது அங்கத்தவர்களின் வாகனங்களுக்கு சுழற்சி முறை அடிப்படையிலேயே மணல்சேவை வழங்கப்பட்டு வருவதால் ஒரு வாகனம் ஒரு சுழற்சியில் 10 தடவைகள் மாத்திரமே சேவையில் ஈடுபடும் நிலை காணப்படுவதுடன் அந்த வாகனமானது மறுபடியும் சுழற்சிமுறை மணல் சேவையில் ஈடுபடுவதற்கு குறைந்தது 6 மாதங்களேனும் காலதாமதமாகின்ற நிலை காணப்படுகிறது.

அத்துடன் குடத்தனை பிரதேச வாகனங்கள் ஒவ்வொரு மாதமும் 25 தடவைகள் சேவையில் ஈடுபடுவதனால் எமது சங்கப்பதிவில் உள்ள அங்கத்தவர்கள் பாதிக்கப்படுகின்ற நிலை காணப்படுவதனாலும் எமது சங்க நலன் கருதி மேற்படி குடத்தனை பிரதேச வாகனங்களுக்கான பதிவுகளை ஏற்றுக்கொள்வது சங்க விதிமுறைகளுக்கு ஏற்புடையதல்ல என்ற காரணத்தினாலும் அவர்களது பதிவுகளை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ். ஜெயக்குமார் தெரிவிதத்ார். (இ)

# மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா

யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா இன்று வியாழக்கிழமை காலை 8.15 மணிக்கு அதிபர் ரவீந்திரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது

இந் நிகழ்விற்கு இலங்கைக்கான ஆர்ஜன்டினா தூதுவர் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்மாவட்டரொட்டரக்கழக உறப்பினர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். (ம-03.136)

# யாழில் நாளை அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டராசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் அவசர கலந்துரையாடல் நாளை 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அமைச்சரின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

எனவே அனைத்து தொண்டராசிரியர்களையும் ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு வடமாகாண தொண்டராசிரியர் சங்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-5)

# இலவச தொழிற்பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் திரவ சவர்க்கார உற்பத்தி தொடர்பான இலவச தொழில்நுட்ப பயிற்சி நெறிச் செயலமர்வு நாளை 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.15 மணியளவில் தம்பசிட்டியிலுள்ள பண்டாரி அம்மன் கோயில் வீதியில் (மாலந்தனி முருகன் கோவிலுக்கு அருகாமையில்) அமைந்துள்ள பருத்தித்துறை பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் நடைபெறும்.

இச்செயலமர்வில் பங்குபற்ற விரும்புபவர்கள் கலந்து கொண்டு பயன்பெறமுடியும் என பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** முகத்தாங்குளம் 2ம் வட்டாரம், பகல அளுத்வத்த கிராமம், கோவில் புதுக்குளம கிராமம், கூடுவெந்தபுலவு கிராமம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** இசைமலைத்தாழ்வு, நரிக்காடு, தலைமன்னார் கிராமம், தலைமன்னார் Palmyrah house, தலைமன்னார் நீர்ப்பாசனசபை ஆகிய பிரதேசங்களிலும மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**வெற்றிக்கும் தோல்விக்கும் சிறு வித்தியாசம். கடமையைச் செய்தால் அது வெற்றி. கடமைக்குச் செய்தால் அது தோல்வி. -மாவீரன் அலெக்சாண்டர்**

# சத்திய தரிசனம்

## சரியான பாதையில் செல்



❖ நம்மைச் சுற்றியுள்ளதை கண்களால் பார்க்கிறோம். உலகைப் பார்க்க மட்டுமல்ல. வல்லமை மிக்க இறைவனைக் காண்பதற்காகவே கண்கள் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

❖ வேகமாகப் போவது மட்டும் முக்கியம் அல்ல. சரியான பாதையில் மனிதன் செல்ல வேண்டும். அப்போது தான் போய்ச் சேர வேண்டிய இடத்துக்குப் போக முடியும்.

❖ அகங்காரமும், சுயநலமும் கொண்ட மனிதர்கள் கண்ணிருந்தும் பார்வையற்றவர்களாகவே வாழ்கிறார்கள்.

❖ நல்ல வழிகாட்டி மனசாட்சியே. அதுவே நமக்கு நல்ல எஜமானாக இருக்கிறது.

❖ கடவுளை வழிபாடு செய்வதாக இருந்தால் மற்றவர்களின் நலனுக்காக மட்டும் இருக்கட்டும்.

❖ குழந்தைகளுக்கு அன்பு, பொறுமை, அமைதி போன்ற நல்ல குணங்களை கல்வி வழங்க வேண்டும்.

❖ கைமாறு கருதாமல் பிறருக்குச் செய்யும் உதவி, வாயில்லாத ஜீவன்களிடம் காட்டும் கருணை இவற்றால் கிடைக்கும் மனநிறைவே சொர்க்கம்.

## ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III

# வடமாகாணத்தில் முதலாமிடத்தைப் பெற்ற ஜொலிஸ்ரார் மூன்றாவது சுற்றிற்கும் தகுதி பெற்று சாதித்தது



ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடருக்கான 2 ஆவது சுற்றின் இறுதிப்போட்டி கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது ஜொலிஸ்ரார் அணி வவுனியா பி(F) றனீஸ் அணியை 77 ஓட்டங்களால் வெற்றி பெற்று வடக்கின் சம்பி யனாகவும் மேற்படி தொடரின் மூன்றாவது சுற்றுக்கும் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஜொலிஸ்ரார் அணி 48 ஓவர்களில் சகல இலக்குகளை யும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றனர்.

சந்தோஸ் - 34, தனுஸ்ரன் - 22, சஜீகன் - 14, ஜனர்த்தன் - 20, ருக்ஸ்மன் ஆட்டமிழக்காது 84 , கிரிஷாந் - 20, கிரிசோபன் - 29, ஓட்டங்களைப் பெற்ற னர்.

களத்தடுப்பில் (வவு) பி(F) றென்ஸ் அணியை சார்ந்த லிங்கேஸ்வரன் - 4, டார்பின்- 2, தினேஸ் கண்ணா, றீகன், சாந்த ரூபன் தலா 1 இலக்கினை கைப் பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய (வவு) பி(F) றென்ஸ் அணி 36.1 ஓவர்களில் சகல இலக்கு களையும் இழந்து 173 ஓட்டங் களைப் பெற்றனர்.

சந்திரபிரகாஸ் - 22, டார்பின் - 11, குமாரபியதுங்க-79, சாந்த ரூபன்-20 ஓட்டங்களைப்பெற்ற னர்.

களத்தடுப்பில் யாழ்.ஜொலிஸ் ரார் அணியைச் சார்ந்த உமேஸ், கோபிராம் தலா 3 இலக்கினை யும் கிரிசோபன்-2 இலக்கினை யும் ருக்ஸ்மன், கிரிஷாந் தலா 1 இலக்கினையும் கைப்பற்றி னர்.

யாழ்.மாவட்டத்தில் பிரிவு III இல் மூன்றாவது சுற்றுக்கு தகுதி பெற்ற 2 ஆவது அணி என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# கடற்கரை கரப்பந்தாட்ட கிண்ணத்தை தனதாக்கியது வல்வை மகளிர் அணி




பருத்தித்துறை பிரதேச செயலக வருடாந்த விளையாட்டுப்போட்டி யின் ஓர் அங்கமாக நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுத் தொடரானது அண்மை யில் நடைபெற்றது.

அந்த வகையில் இறுதியாட்ட த்தில் பருத்தித்துறை ஐக்கிய அணி யினை எதிர்கொண்ட வல்வை அணியானது 23:21, 19:21, 15:04 என்ற செற்கணக்கில் அபார வெற் றியினை பெற்று சம்பியனாகி யது. (க-60)

# பெண்களுக்கான கடற்கரை கபடிப்போட்டி சம்பியனாகியது வல்வை மகளிர் அணி



பருத்தித்துறை பிரதேச செயலக வருடாந்த விளை யாட்டுப் போட்டி யின் ஓர் அங்கமாக நடைபெற்ற பெண் களுக்கான கடற் கரை கபடி சுற்றுப் போட்டி அண்மை யில் நடைபெற்றது.

அந்த வகையில் இடம்பெற்ற இறுதி யாட்டத்தில் பருத் தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழ கத்தை எதிர் கொண்ட வல்வை மகளிர் அணியானது 38:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனா கியது. (க-60)

# தேசிய வீராங்கனைக்கு சர்வதேச தரத்திலான சைக்கிள் கையளிப்பு



கடந்த ஆண்டு நடைபெற்ற தேசிய விளையாட்டு விழாவில் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கம் பெற்ற நந்தீஸ்வரன் ராதிகாவிற்கு இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் பெறுமதி யான சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றும் ரேசிங் பைக் அன்பளிப்பு செய்யப்பட்டது. லண்டனில் வாழும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல வரெத்தினம் திருக்குமாரினால் குறித்த தேசிய வீராங்கனைக்கு அன்பளிப்பு செய் யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# முன்னாள் ஜாம்பவான்கள் பங்கேற்ற கிரிக்கெட் சச்சினை டக் அவுட் ஆக்கி மிருட்டிய வாஸ்!

வீதிப் பாதுகாப்பு இருபது-20 உலகக்கோப்பை தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி யில் இலங்கை அணியை வீழ் த்தி இந்தியா வெற்றி பெற்றது.

உலக கிரிக்கெட் ஜாம்பவா ன்கள் கலந்துகொள்ளும் வீதிப் பாதுகாப்பு இருபது-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் இந் தியாவில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடை பெற்ற ஆட்டத்தில் இந்தியா லெஜ ண்ட்ஸ் அணியும் இலங்கை லெஜண்ட்ஸ் அணியும் மோதியது. இந்தப் போட்டியிலும் டாஸ் வென்ற இந்திய அணியின் கப்டன் சச்சின் ஃபீல்டிங்கை தேர்வு செய்தார்.

இதையடுத்து துடுப்பெடுத்து விளையாடிய இலங்கை அணி சார்பில் தில்ஷன் மற்றும் ரோமேஷ் தொடக்க வீரர்களாக களம் கண்டனர்.

தொடக்கத்தில் இருவரும் சிறப்பாக விளையாடினார்கள். ஒரு கட்டத்தில் இலங்கை அணி 7 ஓவர்கள் முடிவில் 46-0 என்ற நிலையில் இருந்தது.

ஆனால் பின்னர் 9.4 ஓவர் களில் 56-3 என்றானது. சீரான இடைவெளியில் இலங்கை அணி யின் விக்கெட்கள் சரிந்த வண் ணம் இருந்தது.

இதையடுத்து 20 ஓவர்கள் முடிவில் அந்த அணி 8 விக் கெட்கள் இழப்புக்கு 138 ஓட்ட ங்கள் எடுத்தது. தில்ஷன், சமர கபு கிதிர ஆகிய இருவ்ரும் 23 ஓட்டங்கள் எடுத்தனர்.

139 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமி றங்கிய இந்திய அணிக்கு தொடக் கத்திலேயே அதிர்ச்சி காத்திருந் தது.

இலங்கை ஜாம்பவான் சமிந்தவாஸ் முதல் ஓவரிலேயே சச்சின் டெண்டுல்கரை டக் அவுட் ஆக்கினார்.

மறுமுனையில் இருந்த சேவா க்கும் 3 ஓட்டங்களில் அவுட் டாக, அடுத்து வந்த யுவராஜ் சிங்கும் ஒரு ஒட்டத்தில் நடை யைக்கட்டினார்.

இதனால் இந்திய அணி 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டு களை இழந்து தடுமாறியது.

ஆனால் பின்னர் வந்த முக மது கைப் மற்றும் இர்பான் பதானின் பொறுப்பான ஆட்ட த்தால் இந்திய அணி 18.4 ஓவர் களில் 139 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

கைப் 46 ஓட்டங்களும் பதான் 57 ஓட்டங்களும் எடுத்தனர். 3 ஓவர்கள் வீசிய சமிந்தவாஸ் 5 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து 2 முக்கிய விக்கெட்டு களை வீழ்த்தினார்.இந்த போட் டியில் பந்துவீச்சு மற்றும் பட்டிங் என இரண்டிலும் ஜொலித்த இர்பான்பதான் ஆட்ட நாயக னாக தேர்வு செய்யப்பட்டார். (க)

# தென்மராட்சி வலய மட்ட விளையாட்டு விழா நாளை

தென்மராட்சி கல்வி வல யத்தின் வலய மட்ட விளை யாட்டுப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வரணி மத்திய கல் லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தி னராக கொழும்பு பரீட்சைத்தி ணைக்கள பிரதி ஆணையாளர் திருமதி எம்.ஜீவராணி புனிதா, சிறப்பு விருந்தினராக வட மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணி ப்பாளர் ஆர்.இராஜசீலன் ஆகி யோர் கலந்து கொள்வர். (க-114)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## நாடின்...

தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

இதனை அடுத்து அவர் தனிமைப் படுத்தல் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவில் இவரே கொரோனா தொற்றுக்கு உள்ளான முதல் பாராளுமன்ற உறுப்பினராவார்.

இதேவேளை பிரித்தானியாவில் கொரோனாவினால் இறந்தோரின் எண்ணிக்கை 6ஆக உயர்ந்துள்ளது.

382 பேர் இந்த தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 4 ஆயிரத்துக்கு...

அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் ஜசிங்க, இலங்கையில் சுமார் 4443 சீன நாட்டினர் சுகாதார அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

சீனாவில் தற்போது நிலைமை ஒரு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்றும் தினசரி சுமார் 40 பேரே கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுகின்றார்கள் என்றும் கூறினார்.

அவ்வாறு சீனாவில் அந்த எண்ணிக்கையில் கூட ஒரு வீழ்ச்சியை நாங்கள் எதிர்பார்க்கிறோம் என தெரிவித்த அனில் ஜசிங்க, இப்போது வைரஸால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நாடு இத்தாலியே என்றும் கூறினார். (ம-3)

## கோழி இறைச்சி...

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தீர்மானித்துள்ளது. (ம-3)

## விசாவை இடை...

நோக்கில் அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று கடந்த ஜனவரி மாதம் சீனாவில் வேகமாகப் பரவிய போது அந்நாட்டவர்கள் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டால் வருகையின் போதான நுழைவிசைவை வழங்குவதை இலங்கை அரசு இடைநிறுத்தியது.

இந்த நிலையில் அனைத்து வெளிநாடுகளின் சுற்றுலாப் பயணிகளுக்கும் வருகையின் போதான நுழைவு விசைவை (Visa On Arrival) வழங்கும் நடைமுறையை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்த அரசு தீர்மானித்துள்ளது. (ம-3)

## கொரோனா...

பயணிகள் சிலருடன் கடந்த சில நாட்களுக்கு முன் அவர் சேர்ந்து பயணித்துள்ளார்.

இதன்போதே, அவர் தொற்றுக்கு இலக்காகியிருக்கலாமென நம்பப்படுகிறது. (ம-3)

## யாழ்.பொலிஸ்...

யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் மீட்கப்பட்டார். அவர் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், அரியாலை மாம்பழம் சந்தியைச் சேர்ந்த விக்டர் சுந்தர் (வயது - 36 ) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு பொலிஸாரால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவ ம் தொடர்பான வழக்கு ஒன்றில் விக்டர் சுந்தர் பொலிஸாரால் தேடப் பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவர் நேற்றைய தினம் முற்பகல் 11 மணியளவில் சிகை அலங்கரிப்பு நிலையத்திலிருந்த வேளை, யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் மனைவி வேலைக்குச் சென்று வீடு திரும்பிய போது வீடு பூட்டப்பட்டதை அறிந்து தேடிய நிலையிலேயே கணவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது. பொலிஸ் நிலையத்துக்கு அவர் சென்ற போதும் கணவரை பார்க்க பொலிஸார் அனுமதிக்கவில்லை.

அதனால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் அலு வலகத்தில் சந்தேக நபரின் மனைவி முறைப்பாட்டை வழங்கியுள்ளார். அது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் இணைப்பாளர் கனகராஜ் துரிதமாகச் செயற்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குள் சென்றுள்ளார்.

அங்கு சந்தேக நபர் கடுமையாகத் தாக்கப்பட்டு மயக்கமுற்ற நிலையில் காணப்பட்டுள்ளார். பொலிஸ் நிலையத்திலிருந்து நேற்று மாலை 6 மணியளவில் சந்தேக நபர் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருக்கு தற்போது அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்படுகிறது.

யாழில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துடன் கணவருக்குத் தொடர்பில்லை. அன்றைய தினம் அவர் வேலைக்குச் சென்றிருந்தார். அத்துடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கிலும் எனது கணவர் சந்தேகநபராகச் சேர்க்கப்படவில்லை.

என் கண் முன்னேயே கணவரை பொலிஸார் கடுமையாகத் தாக்கினார்கள். எனது வீட்டுத் திறப்பு கணவரின் பொக்கெட்டுக்குள் இருந்த போதும் அதனைத் தர பொலிஸார் மறுத்தனர்" என்று பொலிஸாரால் தாக்கப்பட்ட விக்டர் சுந்தரின் மனைவி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய ஆதாரங்கள் கிடைத்துள்ளமையால் பொலிஸாரின் சித்திரவதை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்" என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் இணைப்பாளர் கனகராஜ் தெரிவித்தார். (ம-3,9)

## இலங்கையில்...

குத் திணறிக் கொண்டிருக்கும் நிலையில், அது அபிவிருத்தியடைந்துவரும் எமது நாட்டிற்குள் பரவுமானால், அதனைக் கட்டுப்படுத்துவது மிகவும் சவாலான விடயமாக அமையும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ம-3)

## ஆசிரியர் மீது...

யாத ஐவர் கொண்ட குழுவொன்று அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியரொருவரைத் தாக்கியுள்ளதுடன் அவரை மிரட்டியுமுள்ளது.

குறித்த சம்பவம் நேற்றுப் புதன்கிழமை முற்பகல் இடம்பெற்றுள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

பாடசாலை வளாகத்துக்குள் நுழைந்த ஐந்து பேர் கொண்ட குழு அங்கு கல்வி கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியரொருவரின் கையிலிருந்த பாட நூல்களைப் பறித்து வீசி எறிந்துள்ளனர். பின்னர் குறித்த ஆசிரியரின் கழுத்தை நெரித்ததுடன் அவரைத் தள்ளியுமுள்ளனர். அத்துடன் அவரைப் பாடசாலையிலிருந்து வெளியேற வேண்டுமெனவும் மிரட்டியுள்ளனர்.

இந்நிலையில் மேற்படி சம்பவம் தொடர்பில் பாடசாலை அதிபரால் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும், பின்னர் சமாதானமாகச் செல்வதாக கூறி குறித்த முறைப்பாடு அதிபரால் மீளப் பெறப்பட்டுள்ளது. (ம-3,18)

## சுகாதார திட்டங்...

முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் அமைந்துள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் கொரோனா தனிமைப் படுத்தும் மையம் அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் சோதனையின் பின்னர் பரிந்துரைக்கப்படுவோர் இந்த நிலையத்திற்கு அனுப்பி வைக்கப் படுகின்றனர்.

எனினும் இந்த செயற்பாட்டுக்கு பலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் குழப்ப நிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தகவல் ஊடக அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தனா விக்கிரமசிங்க இந்தத் தகவல்களை வெளியிட்டார். (ம-3)

## இந்துக்களை...

பெயரில் உள்ள வீதிகளை கிறிஸ்தவ மற்றும் பொதுப் பெயர்களாக மாற்றுவதை நிறுத்தக்கோரி இந்து சமய அதியுயர் குருபீடங்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி, பிரதமர், ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த கடிதத்தில்,

இலங்கைத் தீவின் வடபகுதியில் குறிப்பாக கரையோரப் பிரதேசங்களில் இந்துக்களை கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்யும் செயற்பாடுகளும் இந்துப் பிரதேசங்களில் கிறிஸ்தவ சிலைகளை நிறுவும் செயற்பாடுகளும் இந்துக்களின் பூர்வீகப் பிரதேசங்களை இந்துக்கள் அல்லாத பிரதேசங்களாக பெயர் மாற்றம் செய்யும் செயற்பாடுகளும் இந்து ஆலயங்களுக்கும் திருவுருவங்களுக்கும் சேதம் விளைவிக்கும் செயற்பாடுகளுக்கும் ஒரு பகுதி கிறிஸ்தவ பாதிரிமார்களாலும் அவர்கள் சார்ந்த திருச்சபைகளினாலும் அவர்கள் சார்ந்தவர்களாலும் மிக மோசமாக முன்னெடுக்கப்பட்டு வருவது ஆழ்ந்த வேதனைக்குரியதாகும்.

அவை வடபகுதியில் இந்து - கிறிஸ்தவ நட்புறவையும் நல்லிணக்கத்தையும் மிக மோசமாக பாதிக்கும் செயல்கள் ஆகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் அனைத்து இந்து குருபீடங்களும் நிறுவனங்களும் இணைந்து ஒப்பமிட்டு இக் கடிதத்தினை அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஒரு தீவிரமான...

(WHO) அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் சீனாவுக்கு வெளியே உள்ள நாடுகளில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டாக்டர் ரெட்ரோஸ் அடனோம் கெப்ரியசூஸ் தெரிவித்துள்ளார்.

ஒரு தீவிர தொற்றுநோய் என்பது ஒரே நேரத்தில் உலகெங்கிலும் பல நாடுகளில் பரவி வரும் ஒரு நோயாகும்.

வைரஸ் குறித்த எச்சரிக்கையற்ற செயற்பாட்டினால் தான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே அவசர மற்றும் கடுமையான நடவடிக்கை எடுத்து வைரஸ் பரவுவதன் போக்கை மாற்றுமாறு அவர் அரசாங்கங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். (ம-3)

மெகா பவர்
திகதி 2020/03/11
சீட்டிழுப்பு இலக்கம் 509
V 15 53 56 58 72

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 11-03-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2418
D 01 20 39 47

தன நிதானய
திகதி - 2020.03.11
சீட்டிழுப்பு இலக்கம் - 276
K 22 25 30 45

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 11-03-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1025
L 6 7 6 9 3 4

ராசி அதிர்ஷ்டம்
திகதி 11.03.2020 வெற்றி வாரம் 2795 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் மிதுனம் 19 37 49 57
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,913,316
ரூ.500 பரிசுக்குரிய 1609
ரூ.100 பரிசுக்குரிய 519
டபள் சான்ஸ் விசேட இல.
2020.03.12 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுகளாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 330
சீட்டிழுப்பு திகதி 11.03.2020 நீலம்
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 06 28 29
விதி எண் 9
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ.53,248,844
2020/03/13 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 909
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2020.03.11
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,377,410/-
வெற்றி இலக்கங்கள் 22 31 39 45 Q

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல: 3312 திகதி: 2020.03.11 பச்சை புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 50 54 66
R
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 37,404,332.50

## தேசிய பொறுப்பாகக் கருதி...

# கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்த உதவி செய்யுங்கள்

## நாட்டு மக்களிடம் ஜனாதிபதி கோட்டா கோரிக்கை



(கொழும்பு)

தேசிய பொறுப்பாகக் கருதி கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்த நாட்டு மக்கள் அனைவரும் உதவி செய்ய வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதன் மூலம் நாடு என்ற வகையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். உலகின் பல்வேறு முக்கிய நாடுகள் கட்டுப்படுத்த முடியாத வகையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு முகங்கொடுத்துள்ளனர். இந்த நிலையில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு அனைவரினதும் உதவி தேவையானதாகுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சீனாவின் வுஹான் மாநிலத்தில் கொரோனா வைரஸ் பரவுவது ஆரம்பமானது முதல், நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் முடிந்திருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளும் முறையாகவும் திட்டமிட்ட அடிப்படையிலும் செயற்பட்டதன் மூலம் நோய்த்தொற்றை தவிர்க்கக்கூடியதாக இருந்தது. தொடர்ந்தும் இந்த நிலைமையை பேணுவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள நோய்த் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் அனைத்து தரப்பினரதும் முழுமையான உதவி தேவையாகுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-3)

**பதவி வெற்றிடம்**

**கணனி பக்க வடிவமைப்பு**
(இரு பாலாரும்)
**ஒப்பு நோக்குநர் (இரு பாலாரும்)**

பொருத்தமானவர்கள் 13.03.2020 வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:-0760973126
வலம்புரி, பொது முகாமையாளர்
இல:- 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்

# தமிழ், முஸ்லிம் மக்கள் பலமான அரசை ஸ்தாபிக்க ஒத்துழைக்க வேண்டும்

## -கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

அடிப்படைவாத கொள்கையற்றவர்களை உள்ளடக்கிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு தமிழ் ,முஸ்லிம் மக்கள் ஒத்து ழைப்பு வழங்க வேண்டும் என பாரா ளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பொதுஜனபெரமுன தலைமையிலான கூட்டணிக்குள் முரண்பாடுகள் காணப்படுகின்றன. இது சாதாரணம். ஆனால் இம் முரண்பாடுகள் ஒருபோதும் கூட்டணியின் வெற்றிக்கு தடையாக அமையாது என அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் ஒன்றிணைந்துள்ள அரசியல் கட்சிகளை ஒன்றினைத்து பொதுத் தேர்தலில் போட்டியிட்டு நிச்சயம் வெற்றி பெறுவோம்.தேர்தலை வெற்றி கொள்வதற்கான அனைத்து திட்டங்களும் கூட்டணியின் பொதுச்செயலாளரினால் வகுக்கப்பட்டுள்ளது.

இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அறிமுகப்படுத்திய புதிய தேர்தல் பிரசார கட்டமைப்பினை பொதுத்தேர்தலிலும் செயற்படுத்துவோம்.

சுற்றுப்புறச் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி விசேடமாக அறிவுறுத்தியுள்ளார்.

தற்போதைய காலநிலை மற்றும் உலக சூழல் ஆகியவற்றை கருத்திற் கொண்டு தேர்தல் பிரசார செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

அடிப்படைவாத கொள்கைகளற்றவர்களை உள்ளடக்கிய பலமான அரசாங்கத்தை தோற்றுவிப்பதே பிரதான எதிர்பார்ப்பாகும். இதற்கு தமிழ், முஸ்லிம் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் இதன்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**
UK - 550*/=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS
(C-8785)

**காண்டம் பார்த்தல்**
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932,
021 223 2222 (உரும்பிராய்)
(C-8383)

**வேலையாட்கள் தேவை**
யாழில் உள்ள பிரபல்யமான விடுதியில் வேலையாட்கள் தேவை.
அறை பராமரிப்பாளர்,
சுத்திகரிப்பாளர், சமையலறை உதவியாளர்.
தொடர்புகளுக்கு:- (2579)
076 012 4164

**சிகரம் ஹொட்டேல் முகாமைத்துவ கற்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சாதனை!**
ஒரு இலட்சம் ரூபா வரையான சம்பளத்துடன்



12 பேர் றொமேனியா வேலைவாய்ப்பு பெற்றனர்!
சிகரம் மட்டுமே தருகிறது
100% வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடனான
**Hotel Management**
ஹொட்டேல் முகாமைத்துவக் கற்கைநெறி
FAST TRACK - ENTRY LEVEL - ADVANCED LEVEL
10க்கும் மேற்பட்ட அணிகள் - 100க்கணக்கான மாணவர்கள்!
புதிய அணி ஆரம்பம் மார்ச். 18 புதன்
பதிவுகளுக்கு 0773616798



றொமேனியா வேலைவாய்ப்பு பெற்றவர்களின் விபரங்களை நேரில் பார்வையிடலாம்
No.1 Award Winning Institute of the North
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
இல. 221-1/1
மின்சார நிலைய வீதி
(2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா ரெக்ஸ் - ரீன் கேர்ல் அருகே
0212219 221

**சாவகச்சேரியில்...**
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
**அருள்**
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8109)



**English**
Diploma / Spoken Eng
**British college**
of higher studies
0212224550 / 0761380212
Sirampiyady lane,
Stanley road, Jaffna
(C-9709)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
**றாஜ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(2582)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.